தமிழ்நாடு • மகளிர் மேம்பாட்டு •

முற்றம்

₹ 15/- | மலர் 17 - இதழ் 02 - ஜூன் 2015 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மகத்தான திட்டங்கள்

அனைத்து வங்கி சேவைகளும் ஒரே இடத்தில்...
பாரதீய மகிளா வங்கி லிமிடெட்.

உங்கள் சேமிப்பிற்கு அதிக வருவாய்.

BMB SAVINGS
சேமிப்புக் கணக்கு

5%* p.a
₹1 லட்சத்துக்கும் அதிகமான தொகைக்கு

4.5% p.a
₹1 லட்சம் வரை

*வங்கிக் கணக்கில் உள்ள மொத்த தொகைக்கும் 5%

BMB SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB SILVER SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB GOLD SAVINGS
சேமிப்புக் கணக்கு

உங்களின் மகளுக்கு சுதந்திரத்தின் சிறகுகளை அளித்திடுங்கள்

பெண் குழந்தைகளுக்கு சுய அதிகாரம் வழங்கும் ஒரு புதுமையான ரெக்கரிங் டெபாஸிட்

• வயது : ஒரு நாள் குழந்தை முதல் 15 வயது வரை • குறைந்தபட்ச மாதாந்திர முதலீடு ரூ. 50 அல்லது அதற்கும் அதிக தொகை, மிகச் சரியாக ரூ. 50-ன் பெருக்குத் தொகை • மாதத் தவணையை மாதத்தின் எந்த தேதியில் வேண்டுமானாலும் செலுத்தும் வசதி • காலம் : 3 ஆண்டுகள் முதல் பத்தாண்டுகள் வரை • கடன் வசதி உண்டு : மொத்த மதிப்பின் 85% (தனி நபர் விபத்து காப்பீடு) • TDS இல்லை

இணையதளம்: www.bmb.co.in
https://bmbsmartbanking.co.in/netbanking

பிஎம்பி
பாரதீய மகிளா வங்கி
மகளிருக்கு சுய அதிகாரம், பாரதத்தின் சுய அதிகாரம்.
முற்றிலும் இந்திய அரசுக்குச்சொந்தமானது

BMB
BHARATIYA MAHILA BANK
Empowering Women, Empowering India.
Wholly owned by Govt. of India

प्रधानमंत्री जन-धन योजना
मेरा खाता भाग्य विधाता

स्वच्छ भारत
एक कदम स्वच्छता की ओर

சென்னை கிளை : ஓவர்சீஸ் டவர்ஸ், 756-L, அண்ணா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 044 28523321

கோயமுத்தூர் கிளை : தேவராஜன் சென்டர், ஐயப்ப பூஜா சங்கம் அருகில், 206/1, சத்யமூர்த்தி ரோடு, ராம்நகர், கோயமுத்தூர் - 641 009 தொலைபேசி : 0422-4373749/29

திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்பு தோழிகளே,

மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலமாக, பெண்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்புத் திட்டம் ஒன்றினை அறிவித்து இருக்கிறார்கள்.

இந்தத் திட்டம் தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புற பகுதிகளிலும், நகர்ப்புற பகுதிகளிலும் நடப்பு நிதி ஆண்டிலேயே நிறைவேற்றப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் பலனை நீங்கள் முழுமையாக அடைய வேண்டும் என்றால், இதன் சிறப்பம்சங்களை அறிந்து கொள்வது அவசியம்.

கணவனை இழந்தவர்கள், விவாகரத்து பெற்றவர்கள், பிரிந்து வாழ்பவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், கணவன் தீராத நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பதன் மூலம் பொருளாதார ரீதியில் குடும்பத்தின் வருமானத்திற்கு உதவி செய்ய முடியாதவர்கள் ஆகிய குடும்பங்கள் இந்த திட்டத்தின் மூலம் பயன் அடையலாம்.

இத்திட்டத்தின் கீழ், குடும்ப தலைவராக உள்ள மகளிரோ அல்லது அவரது மகனோ மகளோ பயன் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

18 முதல் 45 வயது வரையிலான மகளிருக்கு அல்லது அவருடைய மகன் அல்லது மகளுக்கு தனியார் நிறுவனங்களின் மூலம் உறுதியான வேலைவாய்ப்புடன் கூடிய மூன்று மாதம் முதல் ஒரு ஆண்டு வரையிலான திறன் வளர்ப்பு பயிற்சி, 45 வயது தாண்டிய மகளிருக்கு சுய தொழில் தொடங்க தேவையான குறுகிய கால திறன் வளர்ப்பு பயிற்சி, சுய தொழில் தொடங்க விரும்பும் மகளிருக்குத் தேவையான வட்டி மானியத்துடன் கூடிய கடன் உதவி, மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட பெண்களை வைத்து சிறப்பு வாழ்வாதார குழுக்கள் அமைத்து, அவர்கள் தொழில் தொடங்க பொதுவான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூபாய் ஒரு லட்சம் வரை மானியம் ஆகிய உதவிகள் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மகளிருக்கென இந்த சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தில் பயனடைய விரும்பும் மகளிர், உங்களின் மாவட்டத்தில் உள்ள, மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் அல்லது புதுவாழ்வு திட்ட அலுவலரை உடனடியாகத் தொடர்பு கொள்ளலாம். நகர்ப்புறங்களில் வாழும் பெண்கள், பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

தமிழக அரசின் சிறப்பான பல திட்டங்களில் இந்த மகளிருக்கான சிறப்பு திட்டம், அவர்களின் வாழ்க்கையில் ஒரு விடிவெள்ளியாக திகழும் என்பதில் ஐயம் இல்லை.

வாழ்த்துகள்,

மீண்டும் சந்திப்போம்.

என்றும் அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 17–இதழ்–02–ஜுன் 2015
விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்
வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
ட்டி. ஆர். வேதநாயகம்
கூடுதல் இயக்குநர்
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
எல். ராஜா
கூடுதல் திட்ட இயக்குநர்
ஆர். ராஜசேகர்
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
ப. கலைமதி
மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு (ஒப்பந்தம்)
மு. செல்வம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், ‘முற்றம்’
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி: 044–2817 3412 / 3413
தொலைநகல்: 044–2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’

அன்புள்ள வாசகர்களுக்கு,

ஆயிரக்கணக்கான குடும்பங்களில் வறுமை ஒழிக்கப்பட்டது. இலட்சக்கணக்கான பெண்கள் சிறுசேமிப்பை தொடர்கின்றனர். பல பெண்களின் மன உளைச்சல் குறைந்துள்ளது. பல குடும்பங்களின் வருமானம் பெருகி வருகிறது. பொருளாதார பிரச்சனைகளை போக்க தொடர் கடன் வசதி கிடைக்கிறது. இவைகள் அனைத்தையும் விட ஒன்றாக அடிக்கடி கூடுவதற்கும், கலந்துரையாடுவதற்கும், கருத்துகள் மற்றும் உணர்வுகளை பகிர்ந்து கொள்வதற்கும் பெண்களுக்கென ஒரு அமைப்பு இருக்கிறது. இவைகள் எல்லாம் நடப்பவை வேறெங்கும் இல்லை... மகளிர் சுய உதவிக் குழுக்களில்தான்.

கூட்டுறவு அமைப்புகள் துவக்க தினத்தை கொண்டாடும் இந்த மாதத்தில், கூட்டுறவு தத்துவத்தோடு நெருங்கிய தொடர்புடைய சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் அணுகுமுறை ஆகியவைகளை ஆழ்ந்து ஆய்வு செய்வதன் மூலம், சுய உதவிக் குழுக்களினால் பெண்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், விளைவுகளையும் அறிந்து கொள்ள முடியும்.

‘ஒருவர் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவருக்காகவும்’ – என்பது கூட்டுறவு தத்துவம். ‘ஒன்றுபடுவோம், ஒவ்வொருவரிடமும் உள்ளவைகளை பகிர்ந்து கொண்டு வளர்ச்சி அடைவோம்’ – என்பது சுய உதவிக் குழுவின் அணுகுமுறை. ‘பல அழிவு சக்திகளால் பிளவுபட்டு சிதறி கிடந்த பெண்கள் ஒன்று சேருகின்றனர்... சங்கமிக்கின்றனர்... தங்கம் செய்யாததை சங்கம் செய்யும்’ என்பது சுய உதவிக் குழுக்களில் நிரூபணமாகிறது.

வாரக் கூட்டங்கள், மாதக் கூட்டங்கள் என பலமுறை கூட்டம் நடத்துகின்றனர். பல முடிவுகளை தீர்மானிக்கின்றனர். குழுவாக சென்று அதிகாரிகளையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களையும் சந்தித்து தங்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர். ‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’ என்பது இப்பொழுது அவர்களுக்குத் தெளிவாகிவிட்டது. நமது வாழ்க்கையின் முன்னேற்றமும் பின்னடைவும் நமது கைகளில் தான் உள்ளன என்பதையும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தெரிந்து கொண்டுள்ளனர்.

கூட்டுறவு நிறுவனமயமாகி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இயங்கி வருகிறது. ஆனால் சுய உதவிக் குழுக்கள் நிறுவனமாக இல்லாவிட்டாலும், கருத்து தெளிவிலும், மன ஒற்றுமையிலும் தொடர்ந்து வலுவாக இயங்க ஆரம்பித்து விட்டது என்பது சிறப்பம்சமாகும். ‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’ என்ற கனவு இன்று செயல்பாடாக நடந்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

केनरा बैंक
(भारत सरकार का उपक्रम)
Canara Bank
(A Government of India Undertaking)
Together We Can
Canara Yuva Awas Rin (CAN-YAR)
We help you achieve at young age
5 times annual income as loan
Principal and interest holiday upto 36 months
Salaried youth aged between 21 to 45 years, with 2 years of service
Option for Pre-EMI interest holiday
Repayment upto the age of 70 years
Processing charges waived till 31.01.2015
Lowest EMI ₹892
Rate of Interest @ 10.20%*
*Terms & conditions apply *Interest linked to Bank's Base Rate
Avail the Home loan to enjoy the benefits of IT exemption upto ₹2.0 lakhs interest for assessment year 2015-16 under Income Tax Act
Contact Nearest Canara Bank Branch / Retail Asset Hub.
Apply Online through www.canarabank.com
Toll Free No. 1800 425 1800
www.canarabank.com

உள்ளே...

ஜவ்வாது மலை	8
மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட நலிவுற்ற குடும்பங்களுக்கான சிறப்புத் திட்டம்	10
அம்மா உணவகங்கள்	12
வைகை மகளிர் சுய உதவிக் குழு	15
அம்மா சிமெண்ட்	22
புதுவாழ்வு	29

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

முற்றம் இதழ் சிறப்பாக, நேர்த்தியாக அமைந்திருக்கிறது. பயனுள்ள செய்திகள், கட்டுரைகள் தாராளமாய், ஏராளமாய் இருப்பது இதழுக்கு கூடுதல் பலம். தொடர்ந்து இதழ் சிறப்புற வாழ்த்துகள்.

கவிஞர். பே. இராஜேந்திரன்,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி மாவட்டம்.

கிராமப்புறங்களில் ஏழ்மையை நீக்க வந்த புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகளையும், புதுவாழ்வு திட்டத்தின் செய்திகளையும் மிகவும் சிறப்பாக வெளியிட்டு வரும் முற்றத்திற்கு எங்களின் ஆதரவு என்றும் உண்டு.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்,
மாடம்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த செய்திகளும், பொது செய்திகளும் முற்றம் இதழில் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. சுய உதவிக் குழுப் பெண்களுக்கு நல்ல தோழியாக முற்றம் இதழ் உள்ளது.

உறுப்பினர்கள்,
தங்கமீன் மகளிர் சுய உதவிக் குழு,
வெண்ணந்தூர், நாமக்கல் மாவட்டம்.

கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் உன்னத நோக்கில் செயல்பட்டு வரும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் வளம் பெற்று வரும் ஏழை எளிய மக்கள் குறித்த செய்திகள் மிகவும் சிறப்பாக இருக்கின்றன.

பாக்கிய மேரி, தலைவி,
கடலன்னை மகளிர் சுய உதவிக் குழு,
பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

தினம்...தினம்...

உலக மருத்துவர்கள் தினம் – ஜூலை 1
உன்னத சேவையைப் போற்றுவோம்

மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களை போக்கி, அவர்களுக்கு வாழ்வளிக்கும் உன்னத சேவையினை ஆற்றும் மருத்துவர்களைப் பெருமைப்படுத்தும் வண்ணம் வருடந்தோறும் ஜூலை மாதம் 1ஆம் தேதி உலக மருத்துவர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியாவில் இந்த தினம், வங்காளத்தை சேர்ந்த மருத்துவர் பிதான் சந்திரராய் அவர்களின் நினைவாக தேசிய மருத்துவர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. பிதான் சந்திரராய், மேற்கு வங்க மாநிலத்தில் 1882ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிறந்தவர். கல்கத்தா மருத்துவக் கல்லூரியில் ஒரே நேரத்தில் மருந்தியல் மற்றும் அறுவை மருத்துவத்திற்கான எம்.ஆர்.சி.பி. மற்றும் எஃப்.ஆர்.சி.எஸ். படிப்புகளை இரண்டாண்டுகள் மூன்று மாதங்களிலேயே படித்து முடித்து சாதனை புரிந்தவர். 1962ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நாள் தன்னுயிர் நீத்த பிதான் சந்திர ராயின் நினைவாக ஆண்டுதோறும் தேசிய மருத்துவர் தினம் கடைபிடிக்கப்படுகிறது. ■

உலக மக்கள் தொகை நாள் – ஜூலை 11
மக்கள் தொகையும் நாட்டின் வளர்ச்சியும்

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அந்நாட்டின் மக்கள் தொகையும் முக்கிய காரணியாகும். அதே சமயத்தில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியே இருக்கும் என்பதும் உண்மை. மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை உலகளாவிய அளவில் மக்களுக்கு எடுத்துச் செல்லும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் ஜூலை மாதம் 11ஆம் தேதியை உலக மக்கள் தொகை நாளாக அனுசரிக்க வேண்டுகோள் விடுத்தது.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திட பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி எளிய மக்கள் மத்தியில் குடும்ப நலத் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள், பாதுகாப்பான கருத்தடை முறைகள் குறித்த விழிப்புணர்வை ஊடகங்கள் மூலம் மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் போன்றவை சிறப்பான பலனை தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ■

சர்வதேச கூட்டுறவு தினம் – ஜூலை 4
கூட்டுறவே நாட்டுயர்வு

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தின் முதலாவது சனிக்கிழமை சர்வதேச கூட்டுறவு தினம் கடைபிடிக்கப்படுகிறது. நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுத் துறை முக்கிய இடம் வகிக்கின்றது. இன்றைய உலகம் சமூக, பொருளாதார மாற்றங்களுடன் கூட்டுறவின் தேவையை உணர்ந்தே உள்ளது. ■

இந்தியாவின் வளர்ச்சிக்கு கூட்டுறவுத் துறை ஒரு முக்கிய காரணமாக திகழ்ந்தது. இந்திய விடுதலைக்கு முன்பே, 1904ஆம் ஆண்டு தற்பொழுதுள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் திரூர் என்ற கிராமத்தில் கூட்டுறவு சங்கம் இந்தியாவிலேயே முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

இன்றைக்கு கூட்டுறவு அமைப்பு சகல துறைகளிலும் இயங்கி வருகிறது. விவசாயிகள், நெசவாளர்கள், பால் உற்பத்தியாளர்கள், கால்நடைகள் வளர்ப்போர், கரும்பு உற்பத்தியாளர்கள், வீட்டு வசதி, கதர், கிராமத் தொழில், தொழிலாளர்கள், மீனவர்கள், மகளிர் என அனைத்துத் தரப்பினரும் தங்களுடைய நலன், பாதுகாப்பு கருதி தங்களுக்கு தாங்களே கூட்டாக, உறவாக கூட்டுறவு அமைப்புகளை உருவாக்கி வருகின்றனர்.

கூட்டுறவு இயக்கம் நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு அமைப்பு மட்டுமல்ல, கிராமப்புறங்கள் முதல் நகர்ப்புறங்கள் வரை உள்ள பல ஆயிரம் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகள் ஜனநாயகத்திற்கு வலிவு சேர்க்கின்றன. இத்தகைய சிறப்பு மிகுந்த கூட்டுறவு இயக்கம் மேலும் ஊக்கத்துடன் செயல்பட அனைவரும் ஒன்றிணைவோம். ■

மேல்பட்டு என்ற மலைக்கிராமம் கடல் மட்டத்திலிருந்து 3050 அடி உயரம் கொண்ட பகுதியாகும்.

ஜவ்வாது மலை

கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஆபரணம்

வேலூர் – திருவண்ணாமலை மாவட்டத்திற்குள் உள்ள கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒருபகுதியாக ஜவ்வாது மலை உள்ளது. ஜவ்வாது மலையின் மையப் பகுதியான ஜம்னாமத்தூர் திருவண்ணாமலையில் இருந்து 70 கி.மீ. தொலைவில் உள்ளது. போளூரில் இருந்து ஜவ்வாது மலைக்கு கொண்டை ஊசிவளைவுகளுடன் கொண்ட மலைச்சாலை வழியாக செல்வது மிகவும் சுவாரசியமாக இருக்கும்.

ஜம்னாமத்தூரில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள பீமன் நீர்வீழ்ச்சியில் 80 அடி உயரத்தில் இருந்து நீர் கொட்டுகிறது. எந்தவித தடையும் இன்றி இந்த நீர்வீழ்ச்சியில் குடும்பத்துடன் சென்று ஆனந்தமாக நீராடலாம். இந்த நீர்வீழ்ச்சிக்கு மழைக்காலம் முடிந்த பின்னர் தான் செல்ல வேண்டும். ஏனென்றால் அப்போதுதான் இந்த நீர்வீழ்ச்சியில் நீர் கொட்டும்.

ஜம்னாமத்தூரில் இருந்து பரமனந்தல் செல்லும் வழியில் மேல்பட்டு என்ற மலைக்கிராமம் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 3050 அடி உயரம் கொண்ட பகுதியாகும். கோடை காலத்திலும் குளிர்ச்சியாக இருக்கும் இங்கு 1890ஆம் ஆண்டு கட்டப்பட்ட கண்ணாடி மாளிகை பயணியர் விடுதியாக செயல்படுகிறது.

இம்மலையின் சில இடங்களில் நீர்மத்தி மரங்கள் உள்ளன. இந்த மரங்களை 15 பேர் ஒன்றிணைந்தால்தான் கட்டிப்பிடிக்க முடியும். அந்த அளவிற்கு அந்த மரங்களின் விட்டம் உள்ளன. இந்த மரங்களில் மட்டும் தான் நூற்றுக்கும் அதிகமான தேன் கூடுகள் காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மலையின் தெற்குப் பகுதியை ஒட்டி பர்வதமலை அமைந்துள்ளது. இங்கு உள்ள அம்மன் கோவில் சிறப்பு வாய்ந்தது. பௌர்ணமிதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தக் கோவிலுக்குச் சென்று அம்மனுக்கு அவர்களே பூஜை செய்து விட்டு விடியும் வேளையில் ஊர் திரும்புவார்கள்.

காவனூர்

ஜம்னாமத்தூரில் இருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ள காவனூர் என்ற இடத்தில் ஆசியாவின் மிகப்பெரிய தொலைநோக்கு மையம் அமைந்துள்ளது. இந்த மையத்தில் அமைந்துள்ள தொலைநோக்கி வழியே வானத்தில் காணப்படும் கோள்கள் சிலவற்றை காணலாம். இந்திய வானியல் ஆய்வு மையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த மையத்திற்கு வானியல் படிக்கும் மாணவர்களும், வெளிநாட்டு ஆய்வாளர்களும் வந்து ஆய்வுகள் மேற்கொள்கின்றனர்.

குள்ளர் வீடுகள்

ஜம்னாமத்தூரில் இருந்து 18 கி.மீ. தொலைவில் பட்டறை காடு என்ற பகுதி உள்ளது. இங்கு செல்ல இரண்டு குன்றுகள் ஏறி இறங்க வேண்டும். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் வாலியர்கள் என்று அழைக்கப்பட்ட குள்ள மனிதர்கள் வாழ்ந்து வந்ததாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இந்தப் பகுதியில் நான்கடி உயரம், ஏழு அடி அகலம் கொண்ட கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான அறைகள் காணப்படுகின்றன.

ஜம்னாமத்தூரில் இருந்து 18 கி.மீ. தொலைவில் பட்டறை காடு என்ற பகுதி உள்ளது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் வாலியர்கள் என்று அழைக்கப்பட்ட குள்ள மனிதர்கள் வாழ்ந்து வந்ததாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

அமிர்தி நீர்வீழ்ச்சி – விலங்கியல் பூங்கா

ஜம்னாமத்தூரில் இருந்து 32 கி.மீ. தூரத்தில் உள்ள அமிர்தியில் நீர்வீழ்ச்சியும், விலங்கியல் பூங்காவும் அமைந்துள்ளன. அமிர்தியின் ஒரு பகுதி வனவிலங்கு சரணாலயமாகவும், மறுபகுதி சுற்றுலாத் தலமாகவும் விளங்கி வருகிறது.

இங்கு பல்வேறு வகையான விலங்குகள் வாழ்கின்றன. மிகச்சிறந்த சுற்றுலாத் தலமான அமிர்திக்கு வார நாட்களில் குடும்பத்துடன் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

கொழுப்புச்சத்து இல்லாத பேஎள்

ஜம்னாமத்தூர் மலைப்பகுதியில் பேஎள் என்ற எள் விளைகிறது. இதிலிருந்து கொழுப்பு சத்து இல்லாத எண்ணெய் எடுக்கப்படுகிறது. மலைப்பிரதேசத்தில் மட்டுமே விளையும் சாமை என்ற தானியம் இங்கு அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது. இந்தப் பகுதி வாழ் பழங்குடி மக்கள் பல்வேறு மலைப்பயிர்களை விளைவித்து வருகின்றனர்.

இம்மலைப் பகுதியில் நிலம் வாங்குவது விற்பது போன்றவை மலைவாசிகள் மட்டுமே மேற்கொள்ள முடியும் என்பதால் வெளிநபர்கள் யாரும் அங்கு நிலம் வாங்கி வீடு மற்றும் விடுதிகள் போன்றவை கட்ட முடியவில்லை. அதனால் தங்கும் வசதிகள் குறைவு. அரசினர் தங்கும் விடுதி ஒன்று இங்கு உள்ளது. தங்குவதற்கு முன்பதிவு செய்ய வேண்டும்.

இங்குள்ள சின்ன சின்ன உணவு விடுதிகளில் சுவை மிகுந்த அசைவ உணவுகள் கிடைக்கின்றன. சுத்தமான தேன் மற்றும் மலைவிளை பொருட்களும் இங்கு கிடைக்கின்றன.

செல்லும் வழி

ஜம்னாமத்தூர் செல்ல நான்கு பாதைகள் உள்ளன. திருவண்ணாமலை போளூர் வழியாகவும், செங்கம் சாலையில் மேல்பட்டு வழியாகவும், வேலூரில் இருந்து அமிர்தி வழியாகவும், வாணியம்பாடியில் இருந்து ஆலங்காயம் – காவனூர் வழியாகவும் ஜம்னாமத்தூர் செல்லலாம். இந்த நான்கு பாதைகளிலும் குறிப்பிட்ட நேரத்திற்குத்தான் பஸ் போக்குவரத்து உள்ளது என்பதால், சொந்தமாக வாகன வசதி ஏற்பாடு செய்து கொள்வது சிறப்பு. ■

சரஸ்வதியின் சபதம்...

(நாடகம்)

சென்ற இதழ் தொடர்ச்சி...

வீராசாமி : அததான் நம்ம ஊர்ல முன்னமே செய்ஞ்சுட்டோமே. நான் கூட டான்ஸெல்லாம் போட்டேனே...

ஊராட்சி மன்றத் தலைவர் : ஆமாம் வீராசாமி... இதெல்லாம் செய்ததால்தான் மக்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு 'மக்கள் நிலை ஆய்வு' பணியில் கிராமமே கலந்துகிச்சி. மேலும் இந்தப் பணியில் எந்தவிதப் பாகுபாடும் இல்லாமல், ஏழை, மிகவும் ஏழை, நடுத்தரம், வசதியானோர் அப்படின்னு தரம் பிரித்து, பட்டியலிட்டு, கிராம சபையிலும், எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் ஒப்புதலும் வாங்கினோம். இதுல மகிழ்ந்த நமது மாவட்ட மகளிர் திட்ட அலுவலரும் 'கிராம வறுமை ஒழிப்பு சங்கம்' அமைக்கிறதுக்கென்று, 'கிராம வறுமை ஒழிப்புச் சங்க துவக்க நிதி' அப்படின்னு ரூ. 50,000/– கொடுத்தார்.

அந்த 50,000/– ரூபாயிலத்தான் இந்தச் சங்கத்துக்கென ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தின் ஒரு பகுதியில் அலுவலகம் அமைச்சி, அதுக்கு தேவையான டேபிள், சேர், பேன், பீரோ, நோட்டுப் புத்தகங்கள்னு வாங்கியிருக்கோம். அது மட்டுமின்றி சுய உதவிக் குழுவில் சேராதவங்களுக்கு குழு அமைத்துக் கொடுத்திருக்கிறோம். மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கான பயிற்சிகள் கொடுத்திருக்கிறோம். அவர்கள் சுயமாகவோ அல்லது குழுவாகவோ சொந்த தொழில் செய்யறதுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

வீராசாமி : அய்யா... நம்ம அலமேலுக்கு...

ஊராட்சி மன்றத் தலைவர் : உண்டுப்பா... அலமேலுக்கு கால் கொஞ்சம் ஊனங்கிறதால கறவை மாடு வாங்க வட்டியில்லாக் கடன் ரூ. 20,000/– தரதுக்கும் ஏற்பாடு பண்ணியிருக்கோம். அலமேலு மாதிரி மற்ற மாற்றுத் திறனாளிகளுக்கும், அவரவர்கள் செய்ய விரும்பும் தொழிலுக்கு பயிற்சி கொடுத்து வட்டியில்லா கடனும் கொடுத்து உதவ ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றோம். மேலும்...

வீராசாமி : அய்யா... இந்த சோடாவக் குடிங்க. அப்புறம் பேசலாம்...

(சோடா குடித்த பின் தொடரும்)

டாக்டர். P. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

பெண்களின் முன்னேற்றத் திற்காக பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

மகளிரை

குடும்பத் தலைவராகக் கொண்ட நலிவுற்ற குடும்பங்களுக்கான சிறப்புத் திட்டம்

ஐந்தாம் முறையாக தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 24.05.2015 அன்று, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சாலை மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய குடும்பங்களுக்கான வீட்டு வசதித் திட்டம், எதிர்மறை சவ்வூடு பரவுதல் நிலையங்கள் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட நலிவுற்ற குடும்பங்களுக்கான சிறப்புத் திட்டம் ஆகிய புதிய திட்டங்களுக்கான கோப்புகளில் கையொப்பம் இட்டார்கள்.

புதிய திட்டங்களின் மூலம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சாலைகளை 1,000 கோடி ரூபாய் செலவில் மேம்பாடு செய்தல், ரூ. 800 கோடி செலவில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், பேரூராட்சிகளில் வசிக்கும் 20,000 குடும்பங்களுக்கு வீட்டு வசதி, 77 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் 1,274 எதிர்மறை சவ்வூடு பரவுதல் நிலையங்கள் மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட நலிவுற்ற குடும்பங்களுக்கான சிறப்புத் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படும்.

மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட நலிவுற்ற குடும்பங்களுக்கான சிறப்புத் திட்டம்

அனைத்துத் துறைகளிலும் சாதனைகள் பல புரிந்து வரும் பெண்கள் பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் பெண்களின் சமுதாய மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

> அனைத்துத் துறைகளிலும் சாதனைகள் பல புரிந்து வரும் பெண்கள் பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் காண வேண்டும்

கடந்த 4 ஆண்டுகளில் மகளிர் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தின் கீழ் 7,655 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, 1090.30 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. 7,268 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 72.68 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

வங்கிகள் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் 20,270 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தொழில் திறனை மேம்படுத்துவதற்காக 16,091 பெண்களுக்கு தொழில் திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2,30,245 இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்களில் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களில் 1,85,867 இளைஞர்கள் பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இவை தவிர 3,407 ஒத்தத் தொழில் குழுக்கள் (Common Livelihood Groups) அமைக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் ரூபாய் ஒரு இலட்சம் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்பனை செய்திட தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் கண்காட்சிகளில் சுய உதவிக் குழுக்களை பங்கேற்க வைத்ததன் மூலம் 13.23 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் 185 இலட்சம் குடும்பங்களில் 25.88 இலட்சம் குடும்பங்கள் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்டுள்ளன. சமூக மற்றும் பொருளாதார ரீதியில் நலிவுற்ற நிலையில் உள்ள மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த சிறப்புத் திட்டம் ஒன்றினை செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும். வறிய குடும்பத்தின் குடும்பத் தலைவியான மகளிரோ அல்லது அவர்களது குடும்பத்திலுள்ள 18 வயது முதல் 45 வயதிற்குட்பட் ஆண் அல்லது பெண் உறுப்பினர் சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பயனாளியாக தகுதி உடையவர் ஆவார்.

மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பத்தை சேர்ந்த பயனாளிகளுக்கு பல்வேறு தொழில் நிறுவனங்களில் உறுதியான வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சிகள், சுய வேலைவாய்ப்பிற்கான திறன் வளர்ப்புப் பயிற்சியுடன் தனிநபர் அல்லது ஒத்த தொழில் செய்வோருக்கு கூட்டாக தொழில் செய்வதற்காக வட்டி மானியத்துடன் கூடிய கடன் உதவி ஆகியவை வழங்கப்படும். மேலும் ஆடைத் தயாரிப்பு, சில்லரை வணிகம் மேற் கொள்ளுதல், அழகு நிலையம் அமைத்தல், கணினி இயக்கம் குறித்த பயிற்சிகள், கட்டுமானப் பணிகள், மின்னணு சாதனங்கள் பழுது நீக்கம், தோல் பொருள் உற்பத்தி, இலகுரக வாகனங்கள் இயக்குதல், செயற்கை ஆபரணங்கள் தயாரித்தல் மற்றும் மற்றும் பேருந்து நடத்துனர் போன்ற தொழில் நடவடிக்கைகள் மேற் கொள்ள பல்வேறு பயிற்சிகள் இந்த சிறப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்படும். வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி அளித்தல் மற்றும் தொழில் தொடங்குவதற்கான வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் ஆகியவற்றுக்காக ஒவ்வொரு பயனாளிக்கும் 10,000 ரூபாய் முதல் 20,000 ரூபாய் வரை செலவிடப்படும். இத்திட்டத்தின் கீழ் மகளிரை தலைவராகக் கொண்டுள்ள ஏழை எளிய குடும்பங்கள் அனைவரும் 5 ஆண்டு காலத்திற்குள் பயன் பெறுவர். 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கான மொத்த திட்ட மதிப்பீடு 750 கோடி ரூபாய் ஆகும். இதற்காக நடப்பாண்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ■

ஏழை எளிய மக்களின் பசி தீர்க்கும் அம்மா உணவகங்கள்

சென்னை மாநகரில் வாழும் ஏழை எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், வாகன ஓட்டுநர்கள், பாரம் தூக்குபவர்கள் என குறைந்த ஊதியத்தில் பணி புரிபவர்கள் பயன் பெறும் வகையில் சென்னை மாநகராட்சியின் சார்பில் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வழங்கும் 'அம்மா உணவகங்கள்' மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.02.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டன. தற்போது சென்னை மாநகராட்சியின் சார்பில் 207 அம்மா உணவகங்கள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. இதுமட்டுமின்றி இதர மாநகராட்சிகளில் 90 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஏழை எளிய மக்கள் அதிக அளவில் வந்து செல்லும் அரசு பொது மருத்துவமனை வளாகங்களில் அம்மா உணவகம் திறக்கப்பட வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில் 20.11.2013 அன்று சென்னை அரசு பொது மருத்துவமனை வளாகத்திலும், 12.02.2014 அன்று மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை வளாகத்திலும், 21.02.2014 அன்று அரசு ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகங்களிலும், 22.09.2014 அன்று சென்னை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனை, சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு ஆர்.எஸ்.ஆர்.எம். மகப்பேறு மருத்துவமனை வளாகங்களிலும் அம்மா உணவகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அம்மா உணவகங்களில், காலை சிற்றுண்டியின் போது, இட்லி சாம்பார் தவிர, பொங்கல் மற்றும் சாம்பார் 5 ரூபாய்க்கும், மதிய உணவின் போது சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் தவிர எலுமிச்சை சாதம் அல்லது கறிவேப்பிலை சாதம் 5 ரூபாய்க்கும், மாலை வேளைகளில் இரண்டு சப்பாத்தி மற்றும் பருப்பு கடைசல் 3 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிந்தனை திறனால் உருவாக்கப்பட்டு, பொது மக்களிடையே மாபெரும் வரவேற்பினைப் பெற்றுள்ள அம்மா உணவகங்கள் குறித்த செய்தி அறிந்து, இந்தத் திட்டத்தினை தாங்களும் செயல்படுத்திட வேண்டும் என்ற நோக்கில் எகிப்து நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகளும், நம் நாட்டில் குஜராத், டெல்லி, ராஜஸ்தான், கர்நாடகா, ஆந்திரா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் அம்மா உணவகங்களை நேரில் பார்வையிட்டு, அவை செயல்படும் விதம் குறித்து கேட்டறிந்து, சிறப்பாக செயல்படுத்தப்படும் இத்திட்டத்தினைப் பாராட்டியுள்ளனர். இவ்வாறு ஏழை எளிய மக்களுக்கு மிகப்பெரும் பயனளிக்கும் அம்மா உணவகங்களின் சேவை மேலும் விரிவுபடுத்தப்படும் என மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதனடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவபுரம் நகராட்சி, ஜி.எஸ்.டி. சாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'அம்மா உணவகத்தை' காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.05.2015 அன்று திறந்து வைத்தார்கள். மேலும் சென்னை மாநகராட்சியில் 45 அம்மா உணவகங்கள், கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய மாநகராட்சிகளில் 4 அம்மா உணவகங்கள், மாவட்ட தலைநகரங்களில் உள்ள அரசு பொது மருத்துவமனைகளில் 23 அம்மா உணவகங்கள் என மொத்தம் 201 அம்மா உணவகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை சா. துரைசாமி அவர்கள், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலாளர் / ஆணையர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

புதுவாழ்வு திட்ட செயல்பாடுகள் ஆய்வுக் கூட்டம்

ஊரகப் பகுதிகளில் தனிநபர் கழிப்பறை மற்றும் திடக் கழிவு மேலாண்மை ஆகியவற்றின் செயலாக்கத்தில், புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் பங்களிப்பு குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு மாநில புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட திட்ட மேலாளர்கள் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் கலந்து கொண்ட மாதாந்திர ஆய்வுக் கூட்டம் சென்னை நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கில் 05.06.2015 மற்றும் 06.06.2015 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அரசு செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், புதுவாழ்வு திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட இயக்குநர்கள் திரு. எல். ராஜா, திரு. ஆர். ராஜசேகர் ஆகியோர், அனைத்து மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர்களிடம் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினர்.

இந்த ஆய்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர் (சுகாதாரம்) திரு. கோ. இலட்சுமிபதி அவர்கள் கலந்து கொண்டு, ஊரகப் பகுதிகளில் தனிநபர் கழிப்பறை மற்றும் திடக் கழிவு மேலாண்மை ஆகியவற்றின் செயலாக்கத்தில், புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் பங்களிப்பு குறித்து விரிவாக எடுத்துரைத்தார். ■

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சமுதாய
வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களின் பணிகள்

ஊரக பகுதிகளில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் தனி நபர்களுக்கு வங்கி தொடர்பான சேவைகள் எளிதில் கிடைத்திட சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களாக ஊரகப் பகுதியில் உள்ள தகுதி வாய்ந்த மற்றும் ஆர்வமுள்ள மகளிர் தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்கள் நிதி உள்ளாக்கம் (அனைவருக்கும் நிதிச் சேவை மற்றும் நிதிசார் கல்வி), கடன் இணைப்பு, கடன் பயன்பாடு, கடன் திரும்பச் செலுத்துதல் மற்றும் கண்காணித்தல், காப்பீடு ஆகிய நான்கு விதமான பணிகளை மேற்கொள்வார்கள்.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் (நிதிச் சேவை மற்றும் கல்வி)

1. வங்கியின் நிதி சார்ந்த தேவைகள் மற்றும் நிதிசாரா சேவைகள் பற்றி ஊரக பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
2. சேவைப் பகுதி வங்கி கிளைகளிலிருந்து, வங்கிக் கணக்கு துவங்கியவர்கள் பற்றிய விவரங்களை ஊராட்சி வாரியாக சேகரித்தல்
3. அனைத்து ஏழை எளிய மக்களும் வங்கியில் சேமிப்பதை ஊக்குவித்தல்
4. புதிய வங்கிக் கணக்கு துவங்கிட, சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு வழிகாட்டுதல்
5. வங்கிக்கணக்குதுவங்கிடதேவைப்படும்அடிப்படை ஆவணங்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் தெளிவுபடுத்துதல்
6. தனிப்பட்ட நபர்கள், தனியார் நிதி நிறுவனங் களிலிருந்துஅதிகபட்சவட்டியில்கடன்வாங்குவதை தவிர்த்து வங்கிகளில் குறைந்தபட்ச வட்டியில் கடன் பெறுவதில் உள்ள நன்மைகளை விளக்குதல்
7. குழு மற்றும் கூட்டமைப்புகளின் நுண்கடன் திட்டத்திற்கான செயலாக்கத்தை மேற்கொள்ள உறுதுணையாக இருத்தல்

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் (கடன் இணைப்பு)

1. தங்கள் பகுதியில் வசிக்கும் ஏழைக் குடும்பங்களின் நிதித் தேவைகளை உள்ளடக்கிய கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் நுண்நிதித் திட்டங்களின் விவரங்களை சேகரித்தல்
2. தகுதியுடைய குழுக்களுக்கு வங்கிகளுடன் இணைந்து தர மதிப்பீடு செய்வதற்குத் திட்டமிடுதல் / வழிநடத்துதல்
3. சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் கடன் இணைப்புப் பெற தேவையான ஆவணங்களை தயாரித்திட உதவுதல்
4. தகுதியான குழுக்களுக்கு கடன் இணைப்பு பெற்று தருதல், கடனைத் திரும்ப செலுத்தி முடித்த குழுக்களுக்கு மறுகடன் இணைப்பு பெறுவதற்கு வழிகாட்டுதல்
5. ஊராட்சி வாரியாக கடன் இணைப்பு விவரங்களையும், கடன் பெற்ற குழுக்களின் விவரங்களையும், பதிவேடுகளில் பதிவு செய்து தொடர் பராமரித்தல்
6. குழுக்களுக்கு வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதம், கடன் திரும்ப செலுத்தும் தவணைக் காலம் குறித்தும், உரிய நேரத்தில் கடனை திரும்ப செலுத்துவதினால் உண்டாகும் பயன்களையும் எடுத்துரைத்தல்
7. ஏழை மற்றும் நலிவுற்றோர் திட்டமிடலில் முன்னுரிமை இருத்தலை உறுதி செய்தல்
8. பிற வங்கி ஒருங்கிணைப்பாளர்களுடன் சேர்ந்து செயல்படுதல்

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் (கடன் திரும்ப செலுத்துதல் மற்றும் கண்காணித்தல்)

1. தனிநபர் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் தவணை விவரங்களை அறிந்து வைத்திருத்தல்
2. ஊராட்சி அளவில் கடன் திருப்பி செலுத்திய விவரத்தினை அறிந்து வைத்திருத்தல்
3. பெற்ற கடன் தொகையை முறையாக திரும்ப செலுத்தும் குழுக்களுக்கு கூட்டமைப்புகளின் அடுத்த கடன் இணைப்பிற்கு வழிகாட்டுதல்
4. வாராக் கடனால் (NPA) ஏற்படும் விளைவுகளைப் பற்றி விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் ■

(தொடரும்)

வெற்றி பெற்ற

வைகை மகளிர் சுய உதவிக் குழு

கோவை மாவட்டம், கிணத்துக்கடவு ஒன்றியம், தாமரைக்குளம் கிராமத்தில் வைகை மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இப்பகுதியில் செயல்படும் தேங்காய் நார் கயிறு திரிக்கும் தொழிற்கூடங்களில் மிகக் குறைந்த கூலிக்கு வேலை செய்து, தங்களுக்குக் கிடைக்கும் மிகக் குறைவான வருவாயில் வறுமை நிலையில் வாழ்ந்து வந்தார்கள்.

இந்நிலையில் மகளிர் திட்டம் குறித்து அறிந்து கொண்ட இந்த கிராமத்து மக்கள், குழுவாக ஒன்றிணைந்து செயல்பட்டு தங்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்திக் கொள்ள தீர்மானித்தனர். அதனடிப்படையில் 12 பெண்கள் இணைந்து வைகை மகளிர் சுய உதவிக் குழுவினை ஆரம்பித்து, வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவங்கி சேமித்து வந்தனர். பின்னர் குழுவில் உள்கடன் பெற்று தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். குழு துவங்கிய ஆறு மாதங்களுக்குப் பின்னர் முதல் தரம் பிரித்தலில் தேர்ச்சி பெற்ற வைகை சுய உதவிக் குழுவிற்கு 10 ஆயிரம் ரூபாய் மானியத்துடன், வங்கிக் கடனாக 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தேங்காய் நார் கயிறு தயாரிக்கும் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள். தங்களின் அனுபவத்தைக் கொண்டு குழுவின் சார்பாக தேங்காய் நார் கயிறு உற்பத்தித் தொழிலை சொந்தமாக தொடங்க முடிவு செய்து, கோவை மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தை அணுகினர். மகளிர் திட்ட அலுவலர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் மேற்படி குழுவிற்கு கடன் பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொண்டனர். வைகை சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தொழில் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு ரூ. 1,25,000/– மானியத்துடன் கூடிய பொருளாதாரக் கடனாக ஐந்து இலட்ச ரூபாய் 22.05.2012 அன்று வழங்கப்பட்டது.



இந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, தொழிலுக்குத் தேவைப்படும் கருவிகள், மூலப் பொருளான தேங்காய் மஞ்சி போன்றவற்றை கொள்முதல் செய்து, தேங்காய் நார் கயிறு உற்பத்தியில் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஈடுபட்டு, தங்களின் வேலைக்கு உரிய கூலியையும் பெற்று வருகின்றனர். அனைத்து செலவினங்களும் போக வருடத்திற்கு ரூ. 1,44,000/– வரை வைகை சுய உதவிக் குழுவிற்கு இலாபம் கிடைக்கிறது. இந்த இலாபத்தினை பிரித்துக் கொள்ளும் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் பொருளாதாரத்தையும் உயர்த்திக் கொண்டுள்ளனர்.

> வைகை மகளிர் சுய உதவிக் குழுவினைப் போல் மேலும் பல மகளிர் சுய உதவிக் குழுக்கள் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் சொந்தமாக தொழில் தொடங்கி வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.

தற்போது வைகை மகளிர் சுய உதவிக் குழுவினைப் போல் மேலும் பல மகளிர் சுய உதவிக் குழுக்கள் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் சொந்தமாகத் தொழில் தொடங்கி வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.

வாழ வழி தெரியாமல் வாடிக்கிடந்த மக்களின் வாழ்வில் நம்பிக்கை என்ற ஒளி ஏற்றி, சாதனை படைக்க வைத்த பெருமை மகளிர் திட்டத்திற்கு மட்டுமே உண்டு என்பதை உலகிற்கு அறிய வைத்துள்ளது வைகை மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றி. ■

உடலுக்கு நலம் தரும்

சீத்தாப்பழம்

கஸ்டர்டு ஆப்பிள் என்றும் பட்டர் ஆப்பிள் என்றும் ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சீத்தாப்பழம் சுவை மிக்க இனிய பழமாகும். குளுகோஸ் வடிவில் நிறைந்த அளவு சர்க்கரைச் சத்தைக் கொண்டிருக்கும் இப்பழம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பப்படுகிறது.

வெப்பம் மிகுந்த பகுதிகளில் எளிதாக வளரும் சீத்தா சிறு மர வகையைச் சார்ந்தது. தனிப்பட்ட மணமும், சுவையும் கொண்ட இப்பழத்தின் தோல், விதை, இலை, மரப்பட்டை அனைத்துமே மருத்துவப் பண்புகளைக் கொண்டது. நீர்ச்சத்து அதிகமாக உள்ள சீத்தாப்பழத்தில், மாவுச் சத்து, புரதம், கொழுப்பு, தாது உப்புகள், நார்ச்சத்து, சுண்ணாம்புச் சத்து, பாஸ்பரஸ், இரும்புச் சத்து போன்றவை அடங்கியுள்ளன. சீத்தாப்பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் செரிமானப் பிரச்சனைகள் தீரும். மலச்சிக்கல் நீங்கும். இலைகளை அரைத்து புண்கள் மேல் பூசி வந்தால் புண்கள் ஆறும். குழந்தைகளுக்கு இப்பழத்தை சாப்பிடக் கொடுத்தால் அவர்களின் எலும்புகளும் பற்களும் உறுதியாகும். சீத்தாப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இதயம் பலப்படுவதுடன் காசநோயும் மட்டுப்படும். குளிர் மற்றும் காய்ச்சலையும் கட்டுப்படுத்தும்.

பெண்களின் கூந்தல் அழகிற்கும் சீத்தாப்பழம் உதவுகிறது. சீத்தாப்பழ விதைகளை காயவைத்து அரைத்து வைத்துக் கொள்ளவும், சிறிதளவு வெந்தயம், சிறு பயிறு இரண்டையும் சேர்த்து இரவு ஊற வைத்து பின்னர் காலையில் சேர்த்து அரைத்து, இதனுடன் சிறிதளவு சீத்தாப்பழ பொடியையும் கலந்து தலையில் தேய்த்து ஊறிய பின்னர் குளித்து வர தலை குளிர்ச்சி பெறும். முடியும் உதிராது. பொடுகு தொல்லையும் நீங்கும்.

சீயக்காய் அரைக்கும் போது சிறிதளவு சீத்தாப்பழ விதைகளையும் சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு வாரம் ஒருமுறை தலைக்கு தேய்த்து குளித்து வர பேன் தொல்லை ஒழியும்.

சீத்தாபழச் சதையோடு உப்பைக் கலந்து பருக்கள் மேல் தடவி வர பருக்கள் மறையும். கெட்ட கொலஸ்ட்ராலைக் குறைத்து, உடலில் அனாவசியமாக சேரும் கொழுப்பை குறைக்க சீத்தாப்பழம் உதவுகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே அடிக்கடி சீத்தாப்பழத்தைச் சாப்பிட வேண்டும். ■

> சீத்தாப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இதயம் பலப்படுவதுடன் காசநோயும் மட்டுப்படும். குளிர் மற்றும் காய்ச்சலையும் கட்டுப்படுத்தும்.

கேள்வி-பதில்

மூட்டு வலி தீருமா?

முடிக்கு இயற்கை நிறம் கிடைக்குமா?

கேள்வி :

எனக்கு 35 வயது. என் தலை முடிகள் நரைத்து விட்டன. தலைக்கு 'டை' அடித்தால் செயற்கையாக இருக்கும். எனவே மருதாணி போடலாமா?

பதில் :

மருதாணி போட்டுக் கொள்ளும் போது, தலைமுடி செந்நிறமாக மாறும் வாய்ப்புள்ளது. பரவாயில்லை என்றால் மருதாணிப் பவுடரை வாங்கி, அதில் புளி, வெந்தயம் போன்றவற்றை சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டிய தண்ணீரில் கலந்து, மறுநாள் அதில் எலுமிச்சம் சாறையும், தயிரையும் கலந்து தலையில் தடவலாம். இந்தக் கலவையை இரும்புச் சட்டியில் போட்டுக் கலந்தால் மிகுந்த பலனைத் தரும். நீங்கள் 35 வயதானவர் என்பதால் தரமான ஹெர்பல் டை வாங்கி தலைக்கு பூசி, அதன் மேல் ஹென்னா கலவை தடவி, சிறிது நேரம் கழித்து அலசினால், முடி இயற்கையான கறுப்பாக மாறும்.

மூட்டு வலி தீருமா?

கேள்வி :

12வது படிக்கும் எனது மகள் அதிக பருமனாக இருக்கிறாள். அடிக்கடி மூட்டு வலி வருவதாக சொல்கிறாள். எலும்பு நோய் ஏதாவது இருக்குமோ?

பதில் :

பள்ளிப் பருவத்தில் எலும்பு நோய்கள் வருவதற்கு வாய்ப்புகள் இல்லை. எனவே பயப்பட வேண்டாம். உங்கள் மகள் பருமனாக இருப்பதால் அதிக எடையின் காரணமாக கால் வலி ஏற்படலாம், அதை மூட்டு வலி என்று நினைத்து இருப்பீர்கள். உடல் பருமனை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள். மூட்டு வலி அதிகமாக இருந்தால் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள். ■

உடல் நலம் தரும்

கொள்ளு-பருப்பு பொடி

தேவையானப் பொருட்கள்

துவரம் பருப்பு – 4 கப், கொள்ளு – 1/2 கப், மிளகு – 20, மிளகாய் வற்றல் – 10, பெருங்காயம் – 1 சிட்டிகை, உப்பு – 2 டீஸ்பூன்

செய்முறை

வெறும் வாணலியில் கொள்ளினைப் போட்டி மிதமான தீயில் அது படபடவென வெடிக்கும் வரை நன்கு வறுத்து ஆற வைக்க வேண்டும். அதேபோல் துவரம் பருப்பு, மிளகு, மிளகாய் வற்றல், பெருங்காயம் ஆகியவற்றை மெல்லிய வாசனை வர வறுத்து ஆற வைக்கவும். பிறகு வாணலிச் சூட்டிலேயே உப்பை சற்று வறுத்துக் கொள்ளவும். உப்பை வறுத்து உபயோகிப்பது பொடி நீண்ட நாட்கள் கெடாமல் இருக்க உதவும். வறுத்த அனைத்தையும் மிக்சியில் போட்டு பொடித்து சிறிது ஆறியவுடன் காற்று புகாத டப்பாவில் அடைத்து வைத்து பயன்படுத்தலாம்.

உபயோகிக்கும் முறை

இந்தப் பொடியை சூடான சாதத்துடன் சேர்த்துச் சாப்பிடலாம். பயன்படுத்தும் போது பொடியுடன் சிறிது நெய் அல்லது நல்லெண்ணை கலந்து சாப்பிடலாம்.

சாம்பார், கொள்ளு ரசம், சாம்பார் சாதம் ஆகியவை செய்யும் போது இந்தப் பொடியை சிறிது சேர்த்து கொதிக்க விடலாம். பருப்பின் புரதச் சத்தும், கொள்ளுவின் நன்மைகளும் கலந்த 'கொள்ளு பருப்புப் பொடி' சுவையும் ஆரோக்கியமும் மிகுந்தது. ■

பெண்களின் உடல் நலத்தைக் காக்கும் பொருட்கள்

பயனுள்ள குறிப்புகள்...

செயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் அழகுப் பொருட்கள் பக்க விளைவுகளை ஏற்படுத்தும்.

அழகாகத் தோன்ற வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும். செயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் அழகுப் பொருட்கள் பக்க விளைவுகளை ஏற்படுத்தும். ஆனால் இயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் அழகுப் பொருட்களால் என்றும் பாதிப்பில்லை.

சோற்றுக் கற்றாழை

சோற்றுக் கற்றாழையின் நடுப்பகுதியைப் பிளந்து, அதன் கசப்பான சதைப் பகுதியை மோரில் கலந்து தினந்தோறும் சாப்பிட்டு வந்தால் அல்சர் போன்ற வயிற்று நோய்கள் குணமடையும். மேலும் உடல் சூடு குறைவதுடன் உடலில் இளமைத் தன்மையும் அதிகரிக்கும்.

செம்பருத்திப் பூ

செம்பருத்திப் பூவைக் காய வைத்து தூளாக்கி தலையில் சீயக்காய் போலத் தேய்த்துக் குளித்து வந்தால், பொடுகுத் தொல்லை தீரும். நன்கு தலைமுடி வளருவதுடன், முடி கொட்டுவதும் நின்று விடும். மேலும் கண்களுக்கும் உடலுக்கும் குளிர்ச்சி தரும்.

காரட்

காரட்டை வட்டமாக நறுக்கி, புருவங்களில் தேய்த்து வந்தால், கண் புருவம் அடர்த்தியாகவும் ஒழுங்காகவும் கருமையாகவும் இருக்கும்.

வாழைப்பழம்

வாழைப்பழத்தை மசித்து பால் கலந்து முகத்தில் பூசி, சில நிமிடங்கள் கழித்து தண்ணீரால் கழுவினால் முகம் பொலிவுடன் காணப்படும்.

ஆரஞ்சு

ஆரஞ்சு பழத்தோலை வெயிலில் காய வைத்து பொடி செய்து பாலுடன் கலந்து சருமத்தில் தடவி அரைமணி நேரம் கழித்து கழுவி வந்தால், வெயிலில் ஏற்பட்ட கருமை மறையும்.

வேப்பிலை

வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி அதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, குளித்தால் முகம் பொலிவடையும்.

தக்காளி

தக்காளியை நன்கு குழைத்து, முகத்தில் கரும்புள்ளிகள் இருக்கும் பகுதிகளில் தடவி, 20 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இந்த முறையைத் தினமும் செய்து வந்தால் கரும்புள்ளிகள் நீங்கி விடும். ■

உருளைக் கிழங்கு

பல்வேறு மருத்துவ குணங்கள் நிரம்பியுள்ள உருளைக் கிழங்கை தோலுடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டால் மலச்சிக்கல் பிரச்சனை தீர்ப்பதுடன், நரம்புகளுக்கு புத்துணர்ச்சியை தந்து சருமத்தை பளபளப்பாகும். சிறுநீரகத்தை சீராக இயக்கும் சக்தி வாய்ந்த இக்கிழங்கை, பச்சையாக அரைத்து சாறு எடுத்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர வயிற்றுப் புண்கள் குணமாகும். ■

இயற்கைப் பொருட்களால் கிடைக்கும் நன்மைகள்!

சபதம்

நகரத்திலிருந்து தன் சொந்த ஊருக்கு வந்து இறங்குகிறான் செல்வம்.அப்போது-
ஒரு சிறுகுழந்தையை அவசரம் அவசரமாக ஆட்டோவில் எடுத்துச் சென்றார்கள் அதன் பெற்றோர்.
ஆட்டோ.. தர்மாஸ்பத்திரிக்குப் போப்பா!
என்னாச்சு?
மூணு நாளா பேதியாயிருக்கு. இன்னிக்கு ஆஸ்பத்திரிக்குப் போறாங்க. .எப்பிடி வீடு திரும்புதோ!
டுர்ர்...
இந்த ஊர்ல அடிக்கடி இப்பிடியாவுதுங்க. போனவாரம் இப்படித்தான்..சின்னையனோட மூணுவயசுப் புள்ள செத்துப்போச்சி.
என்ன பிரச்சினையா இருக்கும்...!?
நகரத்தில் டாக்டராக இருக்கும் தன் நண்பனிடம் பேசுகிறான் செல்வம்.
உங்க ஊர்ல முறையான கழிப்பறை வசதி இருக்கா?
எதுக்குக் கேக்கற.?.
முதல்ல உங்க ஊர்ல கழிப்பறைகளைக் கட்டச்சொல்லு
!?
வெட்டவெளியில் மலம்கழிப்பதால் வரும் பிரச்சினைகளை விளக்குகிறார் டாக்டர்.


அதன்பின் ஊர்த் தலைவரான தன் பெரியப்பாவைச் சந்தித்தான் செல்வம்.
வா செல்வம்!
அப்போது
ஐயா.. அந்தக் கொழந்தையும் ஆஸ்பத்திரியிலேயே இறந்துடிச்சாமுங்க.
ஐயோ பாவம்!
அப்படி விட்டுடக்கூடாது பெரியப்பா. இதெல்லாம் முறையான கழிப்பிட வசதி இல்லாததால வர்றது.
அதுக்கும் இதுக்கும் என்ன சம்மந்தம் செல்வம்?
அப்படி இல்ல..
வெட்டவெளியில் மலம்கழிப்பதால் வரும் பிரச்சினைகளையும் அதனால் பல நோய்கள் பரவும் அபாயத்தையும் அனைவருக்கும் விளக்குகிறான் செல்வம்.
இனிமேலாவது திறந்தவெளியில மலம்கழிக்காம விழிப்புணர்வோட இருப்போம்
ஒவ்வொரு வீட்டிலேயும் கழிப்பறை இருக்கிற கிராமமா நம்ம ஊரும் மாறணும்.
நம்ம ஊர்ல கழிப்பறை இல்லாத காரணத்தால இனி எந்தக் குழந்தையும் இறக்கக்கூடாதுன்னு சபதம் எடுப்போம்.
அதன்பின் சுகாதாரமான பாதுகாப்பான ஊராக மாறியது அந்தச் சிற்றூர்.

விழுப்புரம்

திறன் மேம்பாட்டு பயிற்சிகள் ஆய்வு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் 02.06.2015 அன்று விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தந்து, அம்மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் போன்றவற்றை ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின் முதல்கட்டமாக, விழுப்புரம் பி.ஜி.பி. உணவு மேலாண்மை நிறுவனத்திற்கு வருகை தந்த அரசு செயலாளர் அவர்கள், அந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்று வரும் பயிற்சியாளர்களிடம் பயிற்சி குறித்த விபரங்களை கேட்டார்கள். பின்னர் டாலி (Tally) மற்றும் பி.பீ.ஓ. (BPO) பயிற்சிகளை வழங்கி வரும் சாரா தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வருகை தந்து அங்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சிகளை பார்வையிட்டு, ஆலோசனைகளையும் வழங்கினார்கள். இந்த ஆய்வின்போது விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குர் / திட்ட இயக்குநர் திரு. ஜி. இராதா, மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் விஜயகுமார், கமல்ராஜ், குணசேகர், இரமேஷ்பாபு மற்றும் திருமதி. சித்ரா ஆகியோர் உடனிருந்தனர்.■



திண்டுக்கல் குழுக்களுக்கு வங்கிக் கடன்

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் 16.05.2015 அன்று நடைபெற்ற மலர் கண்காட்சியின் போது நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ஊக்கத் தொகையும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனும், மாற்றுத் திறனாளிகளுக்கு காதொலி கருவிகளையும் வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திரு. த. ந. ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் திண்டுக்கல் மாவட்ட திட்ட இயக்குநர் திருமதி. சி. ஜெ. கோகிலா உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

வேலூர்

வாழ்வாதார இயக்க செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், வேலூர் மாவட்டத்தில் வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளையும், புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளையும் 01.06.2015 அன்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் முதற்கட்டமாக தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் இராணிப்பேட்டை ஆறுதல் அறக்கட்டளை நிறுவனத்தின் மூலம் நடைபெறும் ஷூ அப்பர் கிளிக்கிங் / ஷூ அப்பர் குளோசிங் பயிற்சி, ஆற்காடு ஒன்றியம், இரத்தினகிரி கீழ் மீன்னல் ஊராட்சி ரூரல் ஷோர்ஸ் நிறுவனத்தில் நடைபெற்று வரும் பி.பி.ஓ. பயிற்சி போன்றவை முதன்மை செயல் அலுவலர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது.

இரண்டாம் கட்டமாக நடைபெற்ற ஆய்வில் ஆற்காடு ஒன்றியம், நந்தியாலம் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், காவேரிப்பாக்கம் ஒன்றியம் தருமநிதி கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள், தனிநபர் கடன் திருப்பம், கூட்டமைப்பின் கடன் திருப்பம் போன்றவை குறித்தும், ஒத்த தொழில் குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும், தனிநபர் கடன் பெற்றவர்கள் மேற்கொண்டுள்ள தொழில்கள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. இறுதியாக நெமிலி ஒன்றியம், வேட்டாங்குளம் ஊராட்சியில் சுய உதவிக் குழு உறுப்பினர்களால் கட்டப்பட்டு வரும் தனிநபர் இல்ல கழிவறைகளை பார்வையிட்ட முதன்மை செயல் அலுவலர் அவர்கள் பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். இந்த ஆய்வின் போது, வேலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் திரு. மனோகர் சிங், ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. க. லோகநாயகி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர். ■

ஈரோடு

வங்கியாளர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம்

ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக கூட்ட அரங்கில் 22.05.2015 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2015–16ஆம் நிதியாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் நிதியிணைப்பு செய்திட ரூ. 136 கோடி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, வங்கி மற்றும் வங்கிக் கிளைகள் வாரியாக ஆண்டுக் கடன் திட்டம் தயார் செய்யப்பட்டு மாவட்ட அளவிலான வங்கியாளர் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆண்டு கடன் திட்ட புத்தகத்தை வெளியிட மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் அவர்கள் பெற்றுக் கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. பெ. ரேணுகாதேவி, முதன்மை வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அனைத்து வட்டாரங்களைச் சார்ந்த வங்கிக் கிளை மேலாளர்கள் கலந்து கொண்டனர். ■

தேனி

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஒருநாள் புரிந்துணர்வு பயிற்சி

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் தேர்வு செய்யப் பட்டுள்ள சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஒருநாள் புரிந்துணர்வு பயிற்சி 04.06.2015 அன்று முல்லை நகரில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு பயிற்சி மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சிக்கான ஒருங்கிணைப்பு பணிகளை மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. ஜா. உஷாதேவி அவர்களின் வழிநடத்தலின் அடிப்படையில் உதவித் திட்ட அலுவலர்கள் செய்து இருந்தனர்.

புதுக்கோட்டை

ஒத்தத் தொழில் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடைபெற்று வரும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாநில திட்ட மேலாளர் மற்றும் திட்ட அலுவலர் ஆகியோர் 01.06.2015 அன்று ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வில் திருவரங்குளம் ஒன்றியம், புள்ளான்விடுதி ஊராட்சியில் செயல்படும் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் ஒத்தத் தொழில் குழுக்கள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் கீழ் ஆலங்குடி கிரண் நிறுவனத்தில் நடைபெற்று வரும் Tally மற்றும் தையல் பயிற்சி போன்றவை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. ■

நாகப்பட்டினம்

திறன் மேம்பாட்டு பயிற்சிகள் ஆய்வு

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடைபெற்று வரும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் 26.05.2015 அன்று ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வில் மயிலாடுதுறை சி.எஸ்.சி. பயிற்சி நிறுவனத்தை பார்வையிட்டு அங்கு இளைஞர் திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் கீழ் Tally and Web Designing பயிற்சிகளை பெற்று வரும், இளைஞர்களிடம் பயிற்சியின் தன்மைகள், வேலைவாய்ப்பு போன்றவை குறித்து கலந்தாய்வு மேற்கொண்ட முதன்மை செயல் அலுவலர் அவர்கள், பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார்கள். இந்த ஆய்வின்போது நாகப்பட்டினம் மாவட்ட வாழ்வாதார திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர். ■

தொழிற்திறன் பயிற்சிகள் பெற்று வரும் இளைஞர்களிடம் பயிற்சியின் தன்மைகள், வேலைவாய்ப்பு போன்றவை குறித்து கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

நீலகிரி

விற்பனைக் கண்காட்சி

நீலகிரி மாவட்டத்தில் 15.05.2015 முதல் 30.05.2015 வரை நடைபெற்ற கோடை விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியில் நீலகிரி, ஈரோடு, காஞ்சிபுரம், நாமக்கல் மற்றும் கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுவினர் தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்தனர். சிறப்பாக அரங்குகள் அமைத்து விற்பனை செய்த மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு நீலகிரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ■

அம்மா சிமெண்ட்

அம்மா சிமெண்ட் விற்பனை மையம் திறப்பு விழா

வீடு கட்டும் மூலப் பொருட்களில் இன்றியமையாததாக விளங்கும் சிமெண்டினை குறைந்த விலையில் விற்பனை செய்யும் 'அம்மா சிமெண்ட் திட்டம்' மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதன்படி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களின் வாயிலாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் அம்மா சிமெண்ட் விற்பனை மையங்கள் துவக்கப்பட்டு, அந்த மையங்களில் குறைந்த விலையில் அம்மா சிமெண்ட் விற்பனை செய்யப்படுகிறது.

திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்ட புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள மாவட்ட வணிக வளாகத்தில் 'அம்மா சிமெண்ட்' விற்பனையினை 25.05.2015 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் முனைவர் மு. கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். முத்துக்கருப்பன், திருமதி. விஜிலா சத்யானந்த், மாநகர மேயர் திருமதி. இ. புவனேசுவரி, மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. பி. நாராயண பெருமாள், சங்கரன் கோவில் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. ச. முத்துசெல்வி, மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு. வை. ஜெயக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. அ. விஜயகுமார் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கடலூர்

கடலூர் மாவட்டத்தில், கடலூர் ஊராட்சி ஒன்றிய பூமாலை வணிக வளாகத்தில் காரணம்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் செயல்படுத்தப்படும் 'அம்மா சிமெண்ட் விற்பனை அங்காடியினை' 30.05.2015 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. சீ. சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. எம். சி. சம்பத் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. பூ. காஞ்சனா, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் திரு. எஸ். சிவக்குமார் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம், சாலை அகரம் ஊராட்சியில் உள்ள டோக்ரா கட்டிடத்தில் சாலைஅகரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் செயல்படுத்தப்படும் அம்மா சிமெண்ட் விற்பனை அங்காடி துவக்க விழா 25.05.2015 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. வா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் திரு. இரா. லட்சுமணன் அவர்கள், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. வி. சண்முகம் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர்/திட்ட இயக்குநர் திரு. கோ. இராதா அவர்கள், மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் மருத்துவர். இரா. மணி அவர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டத்தில் குறைந்த விலை அம்மா சிமெண்ட் விற்பனை செய்யும் மையத்தின் திறப்பு விழா, 09.06.2015 அன்று திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. கொ. வீரராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் அம்மா சிமெண்ட் விற்பனையினைத் துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. மணிமாறன், திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எஸ். எஸ். குமார், திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. சி. க. வீரணன், உதவித் திட்ட அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்ட பூமாலை வணிக வளாகத்தில் விப்பேடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் குறைந்த விலை சிமெண்ட் விற்பனை செய்யும் 'அம்மா சிமெண்ட் விற்பனை மையத்தை' மாவட்ட ஆட்சியர் முனைவர் வி. கே. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் 08.06.2015 அன்று துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. மரகதம் குமரவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வாலாஜாபாத் பா. கணேசன், திரு. வி. சோமசுந்தரம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. முத்துமீனாள், மகளிர் திட்ட அலுவலர் திருமதி. கிருஷ்ணம்மாள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டம், வேங்கிக்கால் பகுதியில் அமைந்துள்ள பூமாலை வணிக வளாகத்தில் நா.கெங்கப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் செயல்படுத்தப்படும் அம்மா சிமெண்ட் விற்பனை மையத்தினை மாவட்ட ஆட்சியர் திரு. ஏ. ஞானசேகரன், இ.ஆ.ப., அவர்கள் 18.06.2015 அன்று துவக்கி வைத்தார்கள். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு. எஸ். எஸ். தனபதி, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. செவத்தான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார திட்ட மேலாளர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் கலந்து கொண்டனர். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் சார்பில் நடைபெற்ற அனுபவப் பகிர்வு கூட்டம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின்

4வது வருடாந்திர உள்நோக்குதல்

ஒவ்வொரு ஆண்டும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்கள், பயனாளிகள் மற்றும் திட்டப் பணியாளர்கள் ஆகியோரின் அனுபவங்களைப் பகிர்ந்திட வருடாந்திரக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை, செம்மஞ்சேரியில் கடந்த 13.05.2015 மற்றும் 14.05.2015 ஆகிய தேதிகளில் 4வது வருடாந்திரக் கூட்டம், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட முதன்மை செயலர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது

முதல் நாள் நிகழ்ச்சியில், திட்டச் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்தும், அவற்றின் மூலம் கிட்டிய அனுபவங்கள் குறித்தும் கூடுதல் திட்ட இயக்குநர் திரு. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்களால் விரிவாக விளக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வங்கிகளின் வணிகத் தொடர்பாளர்களாக செயல்படும் விதம் குறித்தும், முதுநிலை ஊரக நிதி மேலாளர் திரு. லக்ஷ்மி நாராயணன் அவர்களும், குறுந்தொழில் மேம்பாட்டில் பெற்ற அனுபவங்கள் குறித்து நிறுவன வளர்ச்சி மேலாளர் திரு. கனிங்ஸ்டன் அவர்களும் செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர்.

காப்பீடு திட்டங்கள் குறித்தும், துயர் குறைப்பு நிதி குறித்தும் மதிப்பீட்டு அலுவலர் திரு. செந்தில்குமாரும், நிதி கையாளுதல், கணக்குகள் சரியாக பராமரித்தல் மற்றும் நிதி அறிக்கைகள் அனுப்புதல் ஆகியவை தொடர்பாக நிதி மேலாளர் திரு. சுந்தர்ராஜன் அவர்களும், திட்டத்தின் சிறப்பான செயல்பாடுகள் குறித்து மாவட்ட செயலாக்க அலுவலர்களும் தங்களின் அனுபவங்களை படத் தொகுப்புகள் மூலம் விளக்கினர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் அனைத்து பங்கேற்பாளர்களும் பத்து குழுக்களாகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவும் ஒரு திட்டச் செயல்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டு, தங்களின் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைத்துத் தரப்பினரிடமும், திட்ட செயல்பாடுகள் குறித்து கருத்துக்கள் கேட்டறியப்பட்டது. 2015–16ஆம் ஆண்டில் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்து மாவட்ட செயலாக்க அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இறுதியாக சிறப்பாக செயல்பட்ட கூட்டு வள பணியாளர்களுக்கு முதன்மை செயலர் / திட்ட இயக்குநர் அவர்கள் பரிசுகளை வழங்கி, சிறப்புரையாற்ற, வருடாந்திரக் கூட்டம் இனிதே நிறைவுற்றது. ■

> கலந்து கொண்ட அனைத்துத் தரப்பினரிடமும், திட்ட செயல்பாடுகளில் காணப்படும் நிறை, குறைகள் குறித்து கருத்துக்கள் கேட்டு அறியப்பட்டது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

கூட்டுப் பொறுப்புக் குழுவில் இணைந்து வாழ்வாதாரம் பெற்ற மகளிர்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் மூலம், தற்போது பகுதி சார்ந்த தொழில்கள் மட்டுமல்லாமல் அழிந்து வரும் பாரம்பரிய தொழில்களில் ஒன்றான மண்பாண்டம் தயாரித்தல் தொழிலும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது. திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஊராட்சியை சார்ந்த திருமதி. சரஸ்வதி, திருமதி. லதா, திருமதி. ஜமுனா, திருமதி. மல்லிகா மற்றும் திருமதி. லட்சுமி ஆகிய 5 நபர்கள் இணைந்து 'ஸ்ரீ முகுந்தம்மன் மண்பாண்டம் தயாரித்தல் கூட்டுப் பொறுப்புக் குழு' ஏற்படுத்தி, 15.03.2015 முதல் தொழில் செய்து வருகின்றனர். இதற்கு முன்னர் அவர்கள் மற்ற நபர்களிடம் கூலிக்காக வேலை செய்து கொண்டிருந்தனர். இவர்களின் நிலை அறிந்து ஊராட்சி அளவிலான மகளிர் கூட்டமைப்பு மூலம் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் நாபின்ஸ் நிதி நிறுவனத்துடன் இணைந்து, நாபின்ஸ் கடன் ரூ. 1,40,000/-ம், திட்டப் பங்களிப்பு ரூ. 50,000/-ம், பயனாளிகளின் பங்களிப்பாக ரூ. 10,000/-ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ. 2,00,000/- திட்ட மதிப்பீட்டில் 15.04.2015 முதல் இத்தொழிலை செய்ய நிதியுதவிகள் அளிக்கப்பட்டு தொழில் தொடங்கப்பட்டுள்ளது. இதுநாள்வரை ரூ. 22,300/- இலாபம் பெற்று நல்ல முறையில் செயல்பட்டு வரும் 'ஸ்ரீ முகுந்தம்மன் மண்பாண்டம் தயாரித்தல் கூட்டுப் பொறுப்புக் குழு'வினர் இன்று முதலாளிகளாக உருவாகியுள்ளனர். இத்தொழிலின் வாயிலாக கணிசமான இலாபம் ஈட்டுவதன் மூலம் இவர்களின் பிள்ளைகளின் கல்வி நிலை உயர்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் மூலம், தற்போது பகுதி சார்ந்த தொழில்கள் மட்டுமல்லாமல் அழிந்து வரும் பாரம்பரிய தொழில்களில் ஒன்றான மண்பாண்டம் தயாரித்தல் தொழிலும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது.

நுண் தொழில் மேம்பாட்டின் மூலம் வாழ்வாதாரம்

நுண்தொழில் மேம்பாட்டின் மூலம் வாழ்வாதாரம் பெற்ற பயனாளியான திரு. சதீஷ்குமார் கூறுவதை கேளுங்கள். 'என் பெயர் சதீஷ்குமார், என்னுடைய அம்மா பெயர் திருமதி. வசந்தகுமாரி, நாங்கள் காஞ்சிபுரம் மாவட்டம், சதுரங்கபட்டிணம் ஊராட்சியில் வசித்து வருகிறோம். என்னுடைய அப்பா அம்மா இருவரும் மீன் பிடித்து விற்பனை செய்பவர்கள். இவர்களின் வருமானம் குடும்ப செலவிற்கே போதாமல் இருந்தது. நான் ஒரு போட்டோ ஸ்டுடியோவில் மாதம் ரூ. 4000/- ஊதியத்தில் வேலை செய்து வந்தேன். சொந்தமாக போட்டோ ஸ்டுடியோ ஒன்றை துவக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் திட்ட பங்களிப்பு ரூ. 2,50,000/-, வங்கிக் கடன் தொகை ரூ. 30,000/- மற்றும் எங்களுடைய பங்களிப்பு ரூ. 31,000/- என மொத்தம் ரூ. 3,11,000/- திட்ட மதிப்பில் 'எஸ். எஸ். போட்டோ ஸ்டுடியோவினை' 04.04.2013 அன்று துவக்கி, சிறப்பாக நடத்தி வருகிறேன். இதன் மூலம் எனக்கு மாதம் ரூ. 55,000/- முதல் ரூ. 66,000/- வரை வருவாய் கிடைக்கிறது. எனக்குக் கிடைக்கும் நிகர இலாபமான ரூ. 30,000/-த்தில் திட்ட பங்களிப்பு ரூ. 2,50,000/- மற்றும் வங்கிக் கடன் ரூ. 30,000/- ஆகியவற்றை திருப்பிச் செலுத்தி விட்டேன். என்னுடைய வாழ்க்கை நிலையை உயர்த்திய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

சதீஷ்குமார்,
எஸ். எஸ். போட்டோ ஸ்டுடியோ,
சதுரங்கப்பட்டிணம், காஞ்சிபுரம் மாவட்டம்.

நாபின்ஸ் உதவியுடன்

குறுந்தொழில்கள் ஏற்படுத்துதல் முதன்மைச் செயலருடன் நாபின்ஸ் மேலாண்மை இயக்குநர் ஆலோசனை

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட அலகின் மூலம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு செயல்படுத்தப்பட்ட பல திட்டங்களில் ஒன்றான குறுந்தொழில்கள் சிறப்பாக செயல்பட்டதால், இந்த குறுந் தொழில்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் பொருட்டு, நபார்டு நிதி நிறுவனத்துடன் இணைந்து சுனாமிக்குப் பிந்தை நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் கடந்த 2013–14ஆம் ஆண்டு 19.06.2013ஆம் தேதியன்று 8 வருட காலத்திற்கு 750 நுண் குறுந்தொழில்கள் உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

1000 நுண் குறுந்தொழில்கள் தொடங்க நபார்டு நிதி நிறுவனத்தின் மூலம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்நுண் தொழில்கள் மேற்கொள்வதற்கான முன் மூலதனமாக ரூ. 500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஏற்கனவே 19.06.2013 அன்று ரூ. 300 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது 04.06.2015 அன்று இரண்டாவது தவணையாக ரூ. 200 இலட்சத்திற்கான காசோலையை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களால் நபார்டு நிதி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர். சூரன் அவர்களிடம் வழங்கப்பட்டது.

இதன் மூலம் சுமார் 1000 குறுந்தொழில்கள் ஆறு ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டு, ரூ. 25 கோடி முதல் ரூ. 30 கோடி வரை கடன் வசதி ஏற்படுத்தவும் முறையாக கடன் திருப்பத்தை செயல்படுத்தும் ஊராட்சி

நாபின்ஸ் நிறுவனத்தை, குறுந்தொழில்கள் தொடர்பான நடைமுறைகளை ஆய்வு செய்யும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜூன் 17 முதல் ஜூன் 26 வரை நாபின்ஸ் அலுவலர்கள் அடங்கிய கருத்தரங்கிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 04.06.2015 அன்று முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் தலைமையில் நாபின்ஸ் மேலாண்மை இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் செயலாக்க நடைமுறை குறித்து விவாதிக்கப்பட்டு, ஆறு மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு சுமார் 750 நுண் குறுந்தொழில்கள் தொடங்குவதற்கான முதலீட்டை உயர்த்தி, அளவிலான கூட்டமைப்பிற்கு 1% முதல் 2% வரை ஊக்கத் தொகை அளிக்கவும் முடிவெடுக்கப்பட்டது. மேலும் நாபின்ஸ் நிறுவனத்தை, குறுந்தொழில்கள் தொடர்பான நடைமுறைகளை ஆய்வு செய்யும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜூன் 17 முதல் ஜூன் 26 வரை நாபின்ஸ் அலுவலர்கள் அடங்கிய கருத்தரங்கிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ■

நாகப்பட்டினம் மாவட்டம் மா சாகுபடியில் புதுமை

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் மற்றும் CCD தொண்டு நிறுவனத்தின் மூலம் மதிப்புக் கூட்டு பொருட்கள் உருவாக்குவதற்கான பல்நோக்கு தொழிற்சாலை அமையவிருப்பது இப்பகுதி விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதமாக திகழும் என்பதில் ஐயமில்லை.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் பயனடைந்த நாகப்பட்டினம் மாவட்டம், நாலுவேதபதி பகுதியைச் சேர்ந்த திரு. ஏ. பழனியப்பா தன் அனுபவத்தைப் பற்றி கூறுகையில், 'நான் 15 ஆண்டுகளாக இந்த விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். எனக்கு 2 ஏக்கர் பரப்பளவில் தோத்தாபுரி, நீலம், செந்தூரா, நாடு, பங்கனபள்ளி, காளப்பாடு போன்ற வகைகளில் 150 மா மரங்கள் உள்ளன. இதில் தோத்தாபுரி மற்றும் நீலம் வகை மாமரங்கள் அதிகமான எண்ணிக்கையில் உள்ளன. ஆரம்பத்தில் ரூ. 32,000/–க்கு இந்த மாமரங்கள் அனைத்தையும் குத்தகைக்கு விட்டிருந்தேன்.

கடந்த ஆண்டு காய்ப்பு இல்லாத காரணத்தினால் குத்தகைதாரர்கள் யாரும் குத்தகை கேட்டு வரவில்லை. இதனால் எனக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. அதன்பின் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் என்னைப் போன்ற மா விவசாயிகளை இணைத்து, இயற்கை முறையில் மா சாகுபடி செய்ய வைத்தனர். அதன் காரணமாக எங்களுக்கு மா சாகுபடியில் நல்ல இலாபம் கிடைத்தது. மேலும் இயற்கை மருந்துகளை பயன்படுத்தியதன் காரணமாக மரங்கள் ஆரோக்கியமானதாக உள்ளன. இயற்கை மருந்துகளை தயாரிப்பதற்கான எவ்வித அறிவும் இன்றி இருந்த எனக்கு இயற்கை வேளாண் இடுபொருட்கள் உற்பத்திக்கான பயிற்சி மற்றும் வேளாண் விஞ்ஞானிகளின் நேரடிதொடர்புகள்கிடைத்து,ஆலோசனைகள்பெறமுடிகிறது.இதனடிப்படையில் தற்போது நான் எனது நிலத்தில் 36 ருமேனியா மா கன்றுகளை வைத்துள்ளேன்.

ஆலப்பாக்கம் பகுதி வாழ் மக்கள் கந்து வட்டிக்காரர்களிடமிருந்து விடுபட்ட வரலாறு

விழுப்புரம் மாவட்டம், ஆலப்பாக்கம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள், தங்கள் பகுதியில் 28.05.2015 அன்று சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்ய வருகை தந்தபோது, பின்வரும் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இப்பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 320க்கும் மேற்பட்ட பெண்கள் 3% முதல் 5% வட்டிக்கு ரூ. 5,000/– முதல் ரூ. 50,000/– வரை வெளிநபர்களிடம் கந்து வட்டிக்கு கடன் வாங்கி, மாதா மாதம் அசல் மற்றும் வட்டித் தொகையை திரும்ப செலுத்த முடியாமல் துயரத்தில் வாழ்ந்து வந்தனர். 2008ஆம் ஆண்டு இப்பகுதியில் செயல்படத் துவங்கிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்குப் பின்னர் இப்பகுதி மக்களின் வாழ்க்கை முறையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஆலப்பாக்கம் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினரான திருமதி. ஜெயசித்ரா, திருமதி. நாகலட்சுமி மற்றும் திருமதி. சுதா ஆகியோர் கூறுகையில், 'சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலமாக இதுவரை 25 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒன்றிணைக்கப்பட்டு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பாக மறுசீரமைப்பு செய்யப்பட்டது. திட்டத்தில் உள்ள துயர் குறைப்பு நிதி, மகளிர் சுய உதவிக் குழு உள்கடன், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஊக்க நிதி போன்றவை உறுப்பினர்களின் அவசரமான தேவைகளுக்குக் கடன் வாங்க பெரும் உதவியாக இருந்தது. இதுவரை சுமார் 192 நபர்களுக்கு துயர் குறைப்பு நிதியாக ரூ. 9,60,000/– வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு உள்கடன் ரூ. 10,000/– முதல் ரூ. 50,000/– வரை வழங்கப்படுகிறது. இத்திட்ட முறையானது கந்து வட்டிக்காரர்களின் பிடியில் இருந்து ஆலப்பாக்கம் ஊராட்சி மக்கள் விடுபடும் வழியாக இருந்தது. 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் மரக்காணம் மற்றும் திண்டிவனத்தில் இருந்த வரும் கந்து வட்டிக் காரர்களின் எண்ணிக்கை முழுமையாகக் குறைந்தது என்றும், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஏற்பாடு செய்த நபார்டு – வணி மேம்பாட்டு முகவர் உருவாக்கம் இப்பகுதிக்கு ஓர் வரபிரசாதமாக அமைந்துள்ளது. சுமார் 28 சுய உதவிக் குழுக்களில் உள்ள 330 உறுப்பினர்களுக்கு ரூ. 86,35,000/– வரை கடன் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு சுய உதவிக் குழுவிற்கு ரூ. 2,00,000/– முதல் ரூ. 5,00,000/– வரை 16% வட்டி விகிதத்தில் கடன் வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்களின் அடிப்படை தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது' என்றும் தெரிவித்தனர்.

விருதுநகர்

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தினம்

ஆண்டுதோறும் ஜுன் 12ஆம் தேதி தேசிய அளவில் தேசிய குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு எடுக்கும் வகையில் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற நோக்கத்துடன், மகளிர் சுய உதவிக் குழுக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, விருதுநகர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், புதுவாழ்வு திட்டம் மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் இணைந்து தேசிய குழந்தைத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கிடையே மாபெரும் கோலப்போட்டியினை நடத்தின. விருதுநகர் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இந்த கோலப் போட்டியில் 30க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர் பங்கேற்றனர். குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கோலங்கள் இடப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சண்முகராஜ், தொழில்துறை துணை ஆய்வாளர் மின்னல்கொடி, உதவித் திட்ட மேலாளர்கள் முருகையா, வெள்ளப்பாண்டி, வாழ்வாதார இயக்க உதவித் திட்ட அலுவலர் அழகப்பன், தேசிய குழந்தைத் தொழிலாளர் துறை திட்டப் பணியாளர் பெருமாள்சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர்

மதி அங்காடி திறப்பு விழா

பெரம்பலூர் மாவட்டம் புதிய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய அமைக்கப்பட்டுள்ள மதி அங்காடியை 17.06.2015 அன்று மாவட்ட ஆட்சியர் (பொ) திரு, மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார். கோனேரிபாளையம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் செயல்படுத்தப்படும் இந்த அங்காடியில் பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்படும் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது.

மதி அங்காடி திறப்பு விழா நிகழ்ச்சியில் மாவட்ட வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. கோ. மலர்விழி, பெரம்பலூர் நகராட்சி ஆணையர் திரு. இரா. முரளி, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. பா. சுதாதேவி, முன்னோடி வங்கியின் மாவட்ட மேலாளர் திரு. அருள்தாசன், கிராமிய சுய வேலைவாய்ப்புத் துறை திட்ட இயக்குநர் திரு. பார்த்தசாரதி, கோனேரிபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்க மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள், வட்டார திட்ட மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாய் 'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்' இதழ் விளங்கி வருவது உங்கள் அனைவருக்கும் தெரியும். பயனுள்ள கட்டுரைகள், வெற்றிக் கதைகள், பொது அறிவு செய்திகள், மருத்துவம், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள் போன்ற அனைத்து அம்சங்களும் கொண்ட முற்றம் இதழிற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 150/–
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 300/–
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 450/–

விளம்பரக் கட்டணங்கள் விபரம்

அட்டையில்	ரூ. 45,000/–
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 37,500/–
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 30,000/–
அட்டையின் பின்பக்கம்	ரூ. 30,000/–
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 30,000/–

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' என்ற பெயரில், சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும்.

வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

புதுவாழ்வு திட்டம்

கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த புதுவாழ்வு திட்டம் செயல்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில்

ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் ஆய்வு

விழுப்புரம் மாவட்டத்திற்கு 02.06.2015 அன்று ஊரக வளர்ச்சித் துறையின் அரசு செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் வருகை தந்து, புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வில் இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

உளுந்தூர்பேட்டை சரவணா ஓட்டுனர் பயிற்சி பள்ளியினை ஆய்வு செய்து அங்கு பயிற்சி பெறும் மாணவர்களிடையே செயலாளர் அவர்கள் கலந்துரையாடினார். செயல்முறை பயிற்சி, வகுப்பறை பயிற்சி, கட்டண விவரம், பாடத் திட்டம் மற்றும் பயிற்சிப் பள்ளியின் கட்டமைப்பு வசதிகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் தியாகதுருகம் தனமூர்த்தி தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தை ஆய்வு செய்த ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் அவர்கள், பிட்டர், வெல்டர், மெக்கானிக், எலக்ட்ரிஷியன் பிரிவுகளில் உள்ள செய்முறை பயிற்சி வகுப்புகளைப் பார்வையிட்டு மாணவர்களிடம் உரையாடினார். பின்னர் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு பணி ஆணை பெற்ற 20 பயனாளிகளுக்கு கழிவறை கட்டுமான பொருட்கள் வாங்குவதற்கு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து சிறுகடனாக தலா ரூ. 5000/– வழங்கப்பட்டது. இந்த ஆய்வின்போது விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் திரு. கோ. ராதா, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. எஸ். நித்தியானந்தம், உதவித் திட்ட மேலாளர்கள், அணித் தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர். ■

தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு பணி ஆணை பெற்ற 20 பயனாளிகளுக்கு கழிவறை கட்டுமான பொருட்கள் வாங்குவதற்கு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து சிறுகடனாக தலா ரூ. 5000/– வழங்கப்பட்டது.

புதுவாழ்வு திட்டம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் ஆய்வு

திட்டத்தின் செயல்பாடுகள்

மாநில திட்ட இயக்குநர் ஆய்வு

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர் வட்டாரத்திற்குட்பட்ட இலுப்பூர், குத்தலாம் வட்டாரத்திற்குட்பட்ட பெருஞ்சேரி ஆகிய ஊராட்சிகளில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளையும், இளைஞர்களுக்கு வழங்கப்படும் திறன் வளர்ப்பு பயிற்சிகளையும் மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

இப்பகுதிகளில் செயல்பட்டு வரும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஒத்தத் தொழில் குழுக்கள் மற்றும் மின் ஆளுமை மையங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, மக்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு திட்ட செயல்பாடுகள் குறித்த விபரங்களை கேட்டறிந்த திட்ட இயக்குநர் அவர்கள், மயிலாடுதுறையில் இளைஞர்களுக்கு தொழில் திறன் பயிற்சிகள் வழங்கும் தொழிற்பயிற்சி நிறுவனங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அந்நிறுவனங்களில் பயிற்சி மேற்கொண்டுள்ள இளைஞர்களிடம் பயிற்சி குறித்த விபரங்களைக் கேட்டறிந்ததுடன், அவர்களுக்கு வழங்கப்படும் வேலைவாய்ப்பு குறித்து பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார்.

மேலும் இப்பகுதிகளில் கால்நடை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும் ஒருங்கிணைந்து பால் கொள்முதல் செய்து மொத்தமாக விற்பனை செய்வதன் மூலம் அதிக வருவாய் ஈட்ட முடியும் என்றும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனிநபர் உதவி செய்வதுடன், அவர்களுக்கு அரசு வழங்கும் அனைத்து சலுகைகளையும் முழுமையாக பெற்றுத் தரக்கூடிய வகையில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் செயல்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் ஒரு பகுதியாக இலுப்பூர் ஊராட்சியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டு, 17 நபர்களுக்கு கால்நடை துறையின் மூலம் வழங்கப்பட்ட அசோலா வளர்ப்பிற்கான பொருட்கள், 11

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு கூடுதல் நிதியாக ரூ. 22 இலட்சம், சுய உதவிக் குழுக்களுக்கு அமுதசுரபி நிதியாக ரூ. 70,000/- 12 மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனிநபர் கடனாக ரூ. 94,000/- உட்பட மொத்தம் ரூ. 23.64 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ம. ஜெய்கணேஷ், உதவித் திட்ட மேலாளர்கள் திரு. செந்தில்குமார், திரு. செல்வகுமார், திருமதி. சண்முகவடிவு, திரு. மனுநீதிச்சோழன் மற்றும் திட்டப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

> இப்பகுதிகளில் கால்நடை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும் ஒருங்கிணைந்து பால் கொள்முதல் செய்து மொத்தமாக விற்பனை செய்வதன் மூலம் அதிக வருவாய் ஈட்ட முடியும் என்று திட்ட இயக்குநர் அறிவுறுத்தினார்.

தேசிய வள மைய சமூக வல்லுநர்களுக்கான திட்ட வழிகாட்டி பயிற்சி

புதுவாழ்வு திட்டத்தின் தேசிய வள மையத்தின் மூலம் பிற மாநிலங்களுக்கு சென்று சேவை செய்ய விருப்பம் உள்ள சமூக வல்லுநர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 2ஆம் கட்டமாக 05.05.2015 முதல் 12.05.2015 வரை காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலைநகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில், புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், தேசிய மாநில வாழ்வாதார இயக்கம் செயல்பட்டு வரும் பிற மாநிலங்களின் தேவை குறித்தும் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியினை புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் துவக்கி வைத்து, பெண்கள் ஆற்றுப்படுத்துதல் மற்றும் மேம்பாடு குறித்து பயிற்சி அளித்தார். புதுவாழ்வு திட்ட தேசிய வள மைய மாவட்ட திட்ட மேலாளர் திரு. எஸ். வீரபாண்டியன், உதவித் திட்ட மேலாளர்கள் திரு. கே. பி. எஸ். தில்லைநாயகம், திரு. எஸ். சுகுமார் மற்றும் தேசிய வள மைய அணியினர் பயிற்சிக்கான ஒருங்கிணைப்பு பணியினை மேற்கொண்டனர். ■

புதுவாழ்வு திட்ட செயல்பாடுகள் ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது பழமத்தூர் மற்றும் மொறப்பாக்கம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கயைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனிநபர் கடன் மற்றும் கூட்டமைப்புகள் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு அமுதசுரபி கடன், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு கூடுதல் நிதி என மொத்தம் ரூ. 52,53,000/- வழங்கப்பட்டது.

மேலும் பழமத்தூர் ஊராட்சியில் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி. முத்து மீனாள் அவர்கள் கலந்து கொண்டார்.

குன்றத்தூர், சொரப்பனஞ்சேரி இந்துஸ்தான் இன்ஜினியரிங் தொழில்நுட்ப கல்லூரியில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களுக்கு அளிக்கப்படும் வாகனங்கள் பழுது நீக்கும் பயிற்சியை தொடங்கி வைத்த கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள், குன்றத்தூர் சி.எஸ்.சி. பயிற்சி மையத்தில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் புதுவாழ்வு திட்ட மாநில வல்லுநர் திருமதி. சரஸ்வதி கணேசன், காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம்

புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் தூய்மை இந்தியா இயக்கம், தனிநபர் இல்லக் கழிப்பிடம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 22.05.2015 அன்று நடைபெற்றது.

புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. முருகன், மாவட்ட புதுவாழ்வுத் திட்ட மேலாளர் திரு. பிலிப்ஸ் இளையராஜா மற்றும் சமூக வல்லுநர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் செயல்படும் 50 சுய உதவிக் குழுக்களுக்கு சுய தொழில் மேற்கொள்ள ரூ. 50 இலட்சம் வரை தொழிற்கடன் உதவியும், 25 மாற்றுத் திறனாளிகளுக்கு தனிநபர் கடனுதவியாக ரூ. 5 இலட்சமும், திறன் வளர்ப்புப் பயிற்சி நிறைவு செய்த 22 நபர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. ■

புதுவாழ்வு மனநல மருத்துவ முகாம்

நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

தமிழகத்தில் புதுவாழ்வுத் திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் வாயிலாக மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் புதுவாழ்வு மனநலத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சையும், அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருப்பூர்

திருப்பூர் மாவட்டம் குடிமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 28.05.2015 அன்று நடைபெற்ற புதுவாழ்வு மனநலத் திட்ட மருத்துவ முகாமில் மாவட்ட ஆட்சியர் திரு. கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு ரூ. 48 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார். இம்முகாமில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ரூபன் சங்கர் ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சாதனைக்குறள், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. அகமது, புதுவாழ்வுத் திட்ட மேலாளர் திரு. பிலிப்ஸ் இளையராஜா, குடிமங்கலம் ஒன்றியக்குழுத் தலைவர் திரு. முருகன், உதவித் திட்ட மேலாளர்கள் வட்டார மருத்துவ அலுவலர் மற்றும் அணித் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சேலம்

சேலம் மாவட்டம் மாசிநாயக்கன்பட்டி மாவட்ட மகமையில் 20.05.2015 அன்று புதுவாழ்வு மனநலத் திட்ட பொது மருத்துவ முகாமினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. அய்யப்பன் துவக்கி வைத்தார். இம்முகாமில் மனவளர்ச்சி குறைபாடு மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகளும், மருந்துகளும் வழங்கப்பட்டன. மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை, சக்கர நாற்காலிகள், தனிநபர் கடன் உதவியாக ரூ. 5,09,000/– ஆகியவை வழங்கப்பட்டன.

இந்த முகாமில் புதுவாழ்வு திட்ட மாநில வல்லுநர் திரு. கோபாலன், சுகாதாரத்துறை இணை இயக்குநர் திருமதி. விஜயலட்சுமி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. தங்கமணி, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. தரணி, அரசு மருத்துவமனை மருத்துவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வேலூர்

வேலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு மனநல மருத்துவ முகாம் 28.05.2015 அன்று குடியாத்தம் திருவள்ளூர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சியர் முனைவர். இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. மனோகர சிங், வட்டாட்சியர் திரு. ஜோதி, மக்கள் தொடர்பு அலுவலர் திரு. விஜயகுமார், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. பத்மாமணி வட்டார வளர்ச்சி அலுவலர், பள்ளி தலைமை ஆசிரியர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மனநலம் குன்றிய 25 பேர்களுக்கு மொத்தம் ரூ. 1,87.500/–ம், 50 பேருக்கு மரக்கன்றுகளும், மனநலம் குன்றியவர்கள் தொழில் பயிற்சி மேற்கொள்வதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற புதுவாழ்வு மனநல மருத்துவ முகாமில் 116 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் 48 நபர்களுக்கு தனிநபர் கடனாக ரூ. 4,38,000/–ம், 22 நபர்களுக்கு NREGA அட்டை, 3 நபர்களுக்கு தேசிய அடையாள அட்டைகள், 8 நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை போன்றவை வழங்கப்பட்டன. இம்முகாமில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சே. பாஸ்கரன், உதவித் திட்ட மேலாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், திட்ட ஒருங்கிணைப்பு அணியினர் மற்றும் மாவட்ட, வட்டார மகமை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டம், பேரிகை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் நடைபெற்ற புதுவாழ்வு மனநலத் திட்ட மருத்துவ முகாமில் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் 46 மாற்றுத் திறனாளிகளுக்கு 4.60 இலட்சம் ரூபாய் வட்டியில்லா கடனாக வழங்கப்பட்டது. புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட மேலாளர் திரு. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் உதவித் திட்ட மேலாளர், பேரிகை இந்தியன் வங்கி மேலாளர், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர், பெற்றோர் அமைப்பு நிறுவனத்தின் இயக்குநர், ஒருங்கிணைப்பாளர், கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள், புதுவாழ்வு திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

பயணிகள் வாகனங்கள் இயக்கம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை மாநில புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் முதற்கட்டமாக மாவட்ட திட்ட அலுவலகத்தில் நடைபெற்ற உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் பணிகள் குறித்து கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. பின்பு பரமக்குடி களப்பகுதி எஸ். காவனூர் ஊராட்சியில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் ஆய்வுமேற்கொண்டதுடன், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு சிறு தொழில் செய்ய கடன் உதவிகளும் வழங்கப்பட்டது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் போக்குவரத்து வசதியில்லாத குக்கிராமங்களுக்கு போக்குவரத்து வாகன வசதி ஏற்படுத்த மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலம் வல்லந்தை, பேரையூர், வலையப்பூக்குளம், வி. சேதுராஜபுரம் மற்றும் சாத்தனூர் ஆகிய ஊராட்சிகளில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு டாட்டா மேஜிக் போக்குவரத்து வாகனங்கள் ரூ. 17,48,300/– மதிப்பீட்டில் வழங்கப்பட்டது. இதற்காக நடைபெற்ற நிகழ்ச்சியில் கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் கலந்து கொண்டு பயணிகள் வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட திட்ட மேலாளர் திரு. டி. ஜெரோம், உதவித் திட்ட மேலாளர்கள், புதுவாழ்வுத் திட்டப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

விழிப்புணர்வு பிரச்சாரம்

சிவகங்கை மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் சிவகங்கை, கண்ணங்குடி, இளையாங்குடி, திருப்புவனம் மற்றும் எஸ்.புதூர் ஒன்றியங்களில் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் விதமாக மாநில திட்ட இயக்குநரின் அறிவுறுத்தலின்படி, அனைத்து கிராமங்களிலும் கழிப்பறை இல்லாத வீடுகளில் கழிப்பறை கட்டுவதற்கான விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரச்சாரத்தை இதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட 181 சுகாதார தூதுவர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் இணைந்து செய்து வருகின்றனர். மே 1ஆம் தேதியன்று முதற்கட்டமாக பூமி பூஜை போடப்பட்டு, கழிப்பறை கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. ■

தாது உப்புகள், கால்நடைகளின் வளர்ச்சி மாற்றத்திற்கு பெரிதும் உதவுகின்றன.

கறவை பசுக்களின் தீவனத்தில்

தாது உப்புகளின் முக்கியத்துவம்

தாது உப்புகள் பசுக்களின் இனப் பெருக்க திறனை அதிகரித்து கன்றுகள் பிறக்கும் இடைவெளியினை குறைத்து ஓராண்டிற்கு ஒரு கன்றினைப் பெற உதவுகிறது. மேலும் பால் உற்பத்தி நாட்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கிறது. கன்று ஈன்ற பின்பு ஏற்படும் பால் காய்ச்சல், வலிப்பு போன்ற நோய்கள் வராமல் தடுக்க உதவுகின்றன.

கறவைப் பசுக்களின் தீவனத்தில், தாது உப்புகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. மண் வளத்தில் தாது உப்புகள் குறைபாடு காரணத்தால், அதில் வளரும் புற்களை கால்நடைகள் உண்ணும் போது தாது உப்பு பற்றாக்குறை ஏற்படுகிறது.

தாது உப்புகள், பசுக்களின் வளர்ச்சி மாற்றத்திற்கு பெரிதும் உதவுகின்றன. உட்கொள்ளும் தீவனத்தை ஜீரணிக்க இவை பெரிதும் உதவுகின்றன. பசுக்களின் இனப் பெருக்க திறனை அதிகரித்து கன்றுகள் பிறக்கும் இடைவெளியினை குறைத்து ஓராண்டிற்கு ஒரு கன்றினைப் பெற உதவுகிறது. மேலும் பால் உற்பத்தி நாட்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கிறது. கன்று ஈன்ற பின்பு ஏற்படும் பால் காய்ச்சல், வலிப்பு போன்ற நோய்கள் வராமல் தடுக்க உதவுகின்றன. இவ்வகை தாது உப்புக்களை கால்நடை அறிவியல் பல்கலைக் கழக மையங்கள் மூலமாகவும், ஆவின் நிறுவனம் மூலமாகவும் தயாரித்து விற்கப்படுகின்றன.

இந்த தாது உப்புக் கலவையினை கால்நடைகளுக்கு 20–25 கிராம் அளவிலும், கறவை பசுக்களுக்கு 50–60 கிராம் அளவிலும் அளிக்கலாம். அதாவது சாதாரண தீப்பெட்டியில் தாது உப்பினை நிரப்பி, தலைதட்டிய பின்பு அளிக்க வேண்டும். இதுவரை தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்கு ஏற்ற தாது உப்பு கலவை, அந்த மாவட்டத்தின் மண், புல் மற்றும் பசுக்களின் இரத்த அளவீடு கொண்டு தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

தாது உப்பினைப் பற்றிய விவரங்களுக்கு
இயக்குநர்,
கால்நடை உற்பத்தி மையம்,
தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகம்,
சென்னை – 600 051
என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

முனைவர் வெ. புருஷோத்தமன்,
வணிக மேம்பாடு மற்றும் கூட்டாண்மை வல்லுநர்,
புதுவாழ்வு திட்டம், சென்னை. ■

தேனி

மனநல மருத்துவ முகாம்

தேனி மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் சார்பாக, வீரபாண்டியில் உள்ள சரஸ்வதி மஹாலில் 27.05.2015 அன்று புதுவாழ்வு மனநலத் திட்ட மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மனநல பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன. மேலும் 46 பயனாளிகளுக்கு ரூ. 4.61 இலட்சம் மதிப்பிலான தனிநபர் கடனுதவிகளையும், பயனாளிகளுக்கு இலவச மரக்கன்றுகளையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட புதுவாழ்வுத் திட்ட மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (60,100 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

Department of Financial Services
Ministry of Finance
Government of India
இந்தியன் வங்கி
इंडियन बैंक
Indian Bank
PRADHAN MANTRI JAN-DHAN YOJANA
MERA KHATA BHAGYA VIDHATA
உங்களின் வங்கி கணக்கு
இப்போது பாதுகாப்பின் ஆதாரம்
பிரதம மந்திரி
சுரக்ஷா பீமா யோஜனா
பிரதம மந்திரி
ஜீவன் ஜோதி பீமா யோஜனா
அடல்
பென்ஷன் யோஜனா
திட்டத்தின் பலன் பெற இன்றே பதிவு செய்யுங்கள்.
மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள இந்தியன் வங்கி கிளையை அணுகவும்

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication 21.06.2015

திடக்கழிவு மேலாண்மை
SOLID WASTE MANAGEMENT



குப்பையை வீடுவீடாக தூய்மைக் காவலர் சேகரித்தல். (Tricycle)



குப்பையை பிரிப்பதற்கு எடுத்துச் செல்லுதல்

குப்பையை மக்கும் / மக்காத குப்பையாக பிரித்தல். (Segregation Spot)



உரக்குழியில் மக்கும் குப்பையை கொட்டுதல், மறுசுழற்சி செய்ய முடியாத குப்பைகளை மக்காத குப்பை குழியில் கொட்டுதல்

உரம் விற்பனைக்குத் தயார்/ மக்காத குப்பையை மறு சுழற்சி செய்தல்

பிரித்தெடுத்த மறு சுழற்சி குப்பையை விற்பனை செய்தல்.

திடக் கழிவு மேலாண்மையில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை எனக் குப்பைகளை பிரித்தே அகற்ற வேண்டும்.

மக்கிய உரமாக்கத் தகுந்தவை

1. காய்கறிக் கழிவுகள்
2. தோட்டக் கழிவுகள்
3. முட்டை ஓடுகள்
4. மீதமாகும்/கெட்டுப் போன உணவுப் பொருட்கள்
5. காய்ந்த மலர்கள்
6. சமையலறைக் கழிவுகள்
7. பழத் தோல்கள்
8. வாழை இலைகள்
9. பயன்படுத்திய தேயிலைத் தூள்
10. பயன்படுத்திய காப்பித் தூள்

மறு சுழற்சி செய்ய வேண்டியவை

1. பால் கவர், எண்ணை கவர் போன்ற அனைத்து வகை பாலிதீன் கவர்கள்
2. கண்ணாடி பொருட்கள்
3. இரும்புப் பொருட்கள்
4. அலுமினியப் பொருட்கள்
5. பழைய காலணிகள்
6. தண்ணீர் பாட்டில்கள்
7. அட்டைப் பெட்டிகள்
8. பழைய பேட்டரி செல்கள்
9. தோல் பொருட்கள்
10. டூத் பேஸ்ட் டியூப்கள்
11. பவுடர் டப்பாக்கள்
12. உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள்

மறு சுழற்சி செய்ய முடியாதவை

1. உடைந்த ஓடுகள் 2. கட்டிட கழிவுகள் 3. டெட்ரா பேக்குகள் 4. கார்பன் காகிதங்கள் 5. தெர்மோகோல்

பிளாஸ்டிக் உபயோகத்தை தவிர்ப்போம்! ஆரோக்கியமான தமிழகம் படைத்திடுவோம்!!